

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மார்கழி - தை

ஜனவரி - 2020

மலர் 9 இதழ் 1

பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| கிந்மீரவதபர்வம் | 14 |
| தமிழ் பாகவதம் | 16 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 18 |
| தை மாத விசேஷ தினங்கள் | 20 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 20 | 21 |
| வாழ்வின் நான்கு நிலைகள் | 23 |
| மஹாஸ்வாமிகள் 26வது மஹோத்ஸவம் | 25 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 26 |
| புராணக்கதை | 31 |
| மஹிஷாசுரமர்த்தினி ஸ்தோத்ரம் | 33 |
| காளிதாஸர் பிரம்மா துதி | 35 |
| சாங்கர போத ரத்னாவளி | 37 |
| வேதாந்த ஸாரம் | 39 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| ஜய தேவர் அருளிச் செய்த பஜகோவிந்தம் | 43 |
| அத்வைத சித்தி வினா - விடை 1 | 45 |
| பகைமை வெல்லும் வழி | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு



ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

டாக்டர் G. சங்கரநாராயணன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

பேராசிரியர் ம.வே.பசுபதி

பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

திருவள்ளுவர் ஒரு ஸனாதன தர்மி

பண்டைய தமிழ் கலை வானில் திருவள்ளுவர் பூர்ண சந்த்ரனாய் விளங்குகிறார். அதற்குக் காரணம் ஒரே நூலில் நான்கு புருஷார்த்தங்களையும் பற்றி அவர் விவரிதிருப்பது மற்றுமில்லாமல் ஒவ்வொரு விஷயத்தையும் சொல்லும்போது உலகோர் அனுபவத்தை தன் ஸ்வானுபவமாக்கிக் கொண்டு தன்மயாகிறார்.

இவ்வுண்மையே மற்றெல்லா நூல்களைவிட அவரது நூல் படிக்கும் போது உள்ளத்து அகலாது இடம் பெற்றிருப்பதற்குக் காரணம். (திருக்குறள் நூற்றெட்டு நூலின் முகவுரை)

ஒரு சில மாதங்களாக திருவள்ளுவர் பற்றி பேச்சு அடிபடுகிறது. அவர் எந்த மதம் பற்றி என்று ஆளுக்கு ஆள் பேசி அவர் மதிப்பைக் கெடுத்து கொண்டிருக்கிறார்கள். சுமார் பத்து இருபது வருடங்களாக அவரை கிறிஸ்துவராக சித்தரிக்கப்பட்டது. நல்ல வேளை அது நல்ல தமிழ் ஆசிரியர்களால் முறியடிக்கப்பட்டது. சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அவர் எவ்வளவு தர்ம சாஸ்த்ரத்தை, ஸனாதன தர்மத்தை தன் குறட்பாக்களில் தந்திருக்கிறார் என்று புரியும்.

நான்கு புருஷார்த்தங்களான தர்ம அர்த்த காம மோக்ஷத்தை அழகிய தமிழில் படிப்பவர்களைக் கவரும் விதத்தில் ஈரடியில் அள்ளித் தந்துள்ளார் என்றால் மிகையாகாது. பரிமேலழகரின் உரையே இதற்குச் சான்று. சற்று விரிவாகப் பார்ப்போம்.

முதலில் ஸனாதன தர்மத்தின் கூறுகள் என்ன? அவைகளை அவர் எப்படி தன் குறட்பாக்களில் கூறியுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

ஸனாதன தர்மத்தின் அடிப்படைகள்.

ப்ரம்மமே உலகிற்கு ஆதாரம் அது உருவத்துடனும் உருவலில்லாமலும் இரு ரூபங்களாகத் தோன்றும். ஆசையும் கர்ம வினையும் பிறப்புக்குக் காரணம் ஊழ் வலியது.

தர்மோ ரக்ஷதி ரக்ஷித: பஞ்சமகா யக்ஞங்கள் மனிதனின் அன்றாடக் கடமையாகும். ஆத்ம குணங்கள் தான் மனிதனுக்கு அவஸ்யம் மேலே சொன்னவை ஸனாதன தர்மத்தின் சுருக்கமாகும். இவைகளைத் தன் குறட்பாக்களில் வள்ளுவர் எப்படி கூறியுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

**1. ப்ரம்மமே உலகுக்கு ஆதாரம்**

தன் முதற் குறளிலேயே இதைத் தெளிவுபடுத்துகிறார்.

''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு''.

2. ப்ரம்மத்தின் இரு ரூபங்கள் முதல் பத்து குறட்பாக்களில் ஸகுண உபாஸனையைக் கூறுபவர் மெய் உணர்தல் அதிகாரத்தில் மெய்ப் பொருள். சார்பு என்று நிர்குணப் ப்ரம்மத்தைப்பற்றி கூறுவார்.

''எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'' (356)

''சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்று அழித்து
சார்தரா சார்தரு நோய்'' (359)

**3. ஆசை பிறப்புக்குக்காரணம்**

''அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவா பிறப்பீனும் வித்து''(361)

**4. மறுபிறவி**

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து''

ஊழ் வலியது ''ஊழில் பெருவலி யாவுள' 380

தர்மமே பெரியது அறத்தான் வருவதே இன்பம்'' (39)

பஞ்சமகா வேள்விகள்

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு
ஐம்புலதாறு ஓம்பல் தலை'' (43)

ஆத்மகுணங்கள் ஸத்யம் அஸ்தேயம் அஸ்ப்ருஹா ''முதலியன

ஒழுக்கம், வாய்மை, இனியவைகூறல், அழுக்காறாமை வெக்காமை, ஈகை, தீவினை அச்சம் போன்ற தலைப்புகளில் விஸ்தாரமாக ஆத்மகுணங்களைப் பேசுகிறார். தன்னுடைய நூலில் தர்மசாஸ்த்ரம் கூறும் நான்கு நிலைகளையும் கூறி மனிதன் பொதுவாக கடைபிடிக்க வேண்டிய சாமான்ய தர்மங்களை விஸ்தாரமாக வலியுறுத்துகிறார். தர்மசாஸ்த்ரங்கள், பொது தர்மம் விசேஷ தர்மங்களை நான்கு

வர்ணத்தாருக்கும் கூறும் வள்ளுவர் விசேஷ தர்மங்கள் வர்ணந் தோறும் மாறுவதால் பொது அறத்தையே வலியுறுத்துகிறார். (பார்க்க பரிமேலழகரின் முன்னுரை) மேற்கூறிய காரணங்களால் வள்ளுவர் ஸனாதன தர்மத்தையே அழுத்தமாக அழகாக மனம் கவரும் வகையில் கூறிள்ளார் என்பது விளங்கும். இது பற்றி நாம் கூறியது சுருக்கமே.

நமது பெரியவா தீர்க்கதரிசனமாக திருக்குறள் நூற்றெட்டு என்று ஒரு புத்தகத்தை காமகோடி கோசஸ்தானம் மூலம் வெளியிட்டு வள்ளுவர் ஒரு ஸனாதன தர்மி என்று பறை சாற்றினார். (ஸுமார் 2 வருடங்களாக அதை நாங்கள் ப்ரதீபத்தில் வெளியிட்டிருந்தோம்.) படிக்காதவர்கள் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் .

**வாழ்க வள்ளுவம் வாழ்க வாழ்க ஸனாதனதர்மம்f**

என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

---


## ஸ்ம்ருதி முக்தாபம் என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

### அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது

***1. வர்ணாஸ்ரம தர்ம காண்டம், 2. ஆஹ்னிக காண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்த காண்டம் பூர்வ பாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணய காண்டமும் ப்ராயச்சித்த காண்டமும்*** *என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக் குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.*



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்

தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 790244054, 9003845456, 9710765203

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## அத்யாயம் 3

ज्यायसी चेत् कर्मणस्ते मता बुद्धिर्जनार्दन ।
तत्किं कर्मणि घोरे मां नियोजयसि केश्व ।। (3.1)
व्यामिश्रेणेव वाक्येन बुद्धिं मोहयसीव मे ।। (3.2)
सन्यासं कर्मणां कृष्ण पुनर्योगं च शंससि। । (5.1)

என்றெல்லாம் பகவானைப் பார்த்து அர்ஜுனன் கேட்கிறான். “கர்மாவை விட ஞானம் உயர்ந்தது என்பது உன் அபிப்பிராயமாயிருந்தால் என்னை ஏன் கோரமான யுத்தத்தில் தூண்டுகிறாய்”. இவ்விதம் அர்ஜுனன் சொல்லியதைப் பார்ததால், “என் புத்தி தடுமாற்றத்தை அடையும்படியாகச் செய்கிறாய் போலிருக்கிறது. ஒரு சமயத்தில் எல்லாக் கர்மங்களையும் விட்டு விட்டு ஸந்யாஸம் கொள்வதை உயர்த்திச் சொல்லுகிறாய். மற்றோரிடத்தில் கர்ம யோகத்தைப் புகழ்கிறாய். தீர்மானமாக எனக்கு ச்ரேயஸ்ஸான ஒரு வழியைச் சொல்லு” என்றெல்லாம் அர்ஜுனன் கேட்கிறான். பகவானுடைய கீதோபதேச வாக்கியங்களைக் கேட்டு முதல் முதலாக அர்ஜுனனுக்கு ஏற்பட்ட அபிப்பிராயம் மனக் குழப்பமே யென்பது வெளியாகிறது. இரண்டாவது அத்தியாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களைக் கேட்டதன் பிறகு மூன்றாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் “ஏமாற்றுகிறவனைப் போல் என் மனதைக் குழப்புகிறாயே” என்று கேட்கிறான். அதற்குச் சமாதானம் மூன்றாவது அத்தியாயத்தில் ஸ்வாமி சொன்ன பிறகும் ஐந்தாவது அத்தியாயத்தில் ஒன்றும் தீர்மானமாகச் சொல்லுவதாகத் தெரியவில்லையே. ஒவ்வோர் சமயம் ஒன்வொன்றைப் புகழ்கிறீர் என்று மனதிற்கு ஒரு தீர்மானம் ஏற்படாமலேயே கேட்கிறான். அர்ஜுனனோ தெய்வீகமான உத்தம குணங்கள் வாய்ந்தவன் என்று பகவானே சொல்லுகிறார்.

संपदं दैवीमभिजातोसि पाण्डव ।। (16.5)

அவனுக்கே இப்படியிருக்க நாமெல்லோரும் கீதார்த்தம் தெரிந்து விட்டதென்று அனேக வியாக்யானங்கள் எழுதுகிறோமே! ஆனால் நமக்குத் தெரியாதென்று வாயை மூடிக் கொண்டு இருந்து விட்டால் கீதை இருந்துதான் உபயோகமென்ன? இப்படியெல்லாம்

குழம்பும்படி பகவான் தான் ஏன் சொல்லுகிறார்? பகவானுக்குத் தெளிவாக சொல்லத் தெரியாதா? குழம்பும்படி சொல்லுவது அவருடைய ஸ்வபாவமா? குழப்பிச் சொல்ல வேண்டியது சொல்ல வேண்டிய விஷயத்தின் ஸ்வபாவமா? இவ்விதம் அர்ஜுனன் குழம்பக் காரணமென்ன? அர்ஜுனன் வீரனாக யுத்தத்திற்குப் புறப்பட்டான். உடனே அழுது கொண்டு காண்டீபத்தைக் கீழே போட்டான். பகவான் அவனைத் திட்டினார்; ஞானோபதேசம் செய்தார்; அதட்டினார்; பயமுறுத்தினார்; கர்மயோகத்தை ஸ்துதி பண்ணினார்; திரும்பவும் ஞான லக்ஷணத்தைச் சொன்னார். அவனுக்கு அழுகை சற்றுக் குறைந்தது. ஞான லக்ஷணத்தைக் கேட்க சற்று ஆசையுண்டாயிற்று. பகவான் அதையும் அழகாகச் சொல்லுகிறார். திரும்பவும் 'தர்மத்தைச் செய், யுத்தத்தைச் செய்' என்கிறார். சோகத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக இறக்கிக் குழப்பத்தில் கொண்டு வந்து விடுகிறார். இனிக் குழப்பத்திலிருந்து அவனைத் தெளிவிற்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும். நேரே தெளிவிற்கு அழைத்துக் கொண்டு போக முடியாதா பகவானால்? என்ற கேள்வி திரும்பவும் இங்கு பிறக்கிறது.

न बुद्धिभेदं जनयेत् अज्ञानां कर्मसंघिनाम् ।। (3.26)

மனிதன் பூர்ணமான ஆத்மஸாக்ஷாத் காரத்தை அடையாமல் அக்ஞான நிலையில் இருக்கும் வரையில் அவன் கர்மஸங்கியாகத்தான் இருக்க வேண்டும். அந்த நிலையில் அவனுக்கு "கர்மம் மோக்ஷத்தைத் தராது. ஞானமே மோக்ஷத்தைத் தரும்" என்று சொல்லிவிட்டால் அவன் கர்மாவையும் விட்டு விட்டு ஞானத்திற்கும் பக்குவியாகயில்லாமல் த்ரிசங்கு ஸ்வர்க்கத்தில் நின்று விடுவான் அல்லது நரகத்திற்காவது பாத்ரமாகி விடுவான். அப்படியானால் பகவான் அர்ஜுனனுக்கு ஞானத்தைப்பற்றிச் சொல்லியிருக்கக் கூடாது என்கிற கேள்வி திரும்பவும் பிறக்கும். மிகவும் மந்தபுத்தியுள்ளவர்களாகவிருந்தால் அவர்களுக்கு கர்மாவைப் பற்றித்தான் சொல்ல வேண்டும். ஞானத்தைப்பற்றிச் சொல்லக் கூடாது என்பது வாஸ்தவம் தான். அர்ஜுனன் தெய்வீகத்தன்மை வாய்ந்த உத்தமாதிரிகாரியான சிஷ்யனானதால் அவன் ஞான நிலையையடையாத கர்ம யோகத்திற்கே உரித்தானவவனாயிருந்தாலும் அவன் கர்மயோகம் செய்யும் பொழுதே ஞான விதை மட்டில் போட்டிருந்தால் அது ஊறிக் கொண்டேயிருந்து கர்மயோகம் பக்குவமாகும் பொழுது அவனுக்கு அது நன்றாக உபயோகப்படும் என்ற தைரியத்தினால் பகவான் அவனுக்கு இரண்டையும் கலந்து சொல்லுகிறார். ஆனாலும் அது இவ்விதம் மந்தாதிகாரிகளுக்குச் சொல்லக்கூடாத விஷயம்தான் என்பதையும் न बुद्धिभेदं जनयेत् என்கிற ச்லோகத்தால் சூசனை செய்கிறார்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## துஷ்டரிமிருந்து தூர விலகு

*“சுயநலமுள்ளவர் நட்பை விரும்ப மாட்டார். நண்பராக மற்றவர் இருவர் பழகுவதையும் அவர்களால் சகிக்க முடியாதுƒ*



காட்டை ஆண்ட சிங்கம் தனக்கொரு மந்திரியை தேடியது. தமனகனிடம் தனக்கு மந்திரியாகும்படி கோரியது. நரியோ மந்திரியாக மறுத்து அதிகார வலிவு கொண்டவனுடன் பழகுவதே கடினம். அதிலும் சுகபோகத்திலோ, பொருளிலோ நாட்டமில்லாத தனக்கு மந்திரி பதவி தகுந்ததல்ல.

தமனகன் என்ற நரி தன் இனத்தை விட்டகன்று மயானத்திற்கு அருகே வாழ்ந்து தானே பழுத்து உதிர்ந்த கனிகளை மட்டும் புசித்து உயிர் வாழ்ந்தது. மற்ற நரிகள் அதனிடம் ஒருநாள் கூட்டமாக வந்தன. நம் இனம் ஏமாற்றுவதையும் பிறரது உணவையும் களவாடித் தின்பதையும் குலதர்மமாகக் கொண்டது. அதற்கு மாறாக நடப்பது நம் குலத்திற்கே இழுக்கு. நம் இனத்தின் தர்மத்திற்கு விரோதமாக நடப்பதால் உன்னை இனத்திலிருந்து விலக்கி விட்டோம் என்று கூறிச் சென்றன. இந்த இன விலக்கு தனது நன்மைக்கே என்றுணர்ந்த தமனகன் தன் வாழ்க்கை முறையை மேலும் தீவிரமாக்கிக் கொண்டது.

பிறரிடம் சேவை செய்து பழகாத நான் சிங்கத்திடம் பணிந்து நடக்க இயலாது. அற்பத்தில் திருப்தி அடைந்து தன்னை விலைக்கு விற்கத் துணிந்தவனே அரசரிடம் பணியாளராக இருக்க முடியும். இது தன்னால் ஆகாது. இதனைச் சிங்கத்திடம் தமனகன் விளக்கியது.

சிங்கமோ “உன்னைப் பெற்றோர் போல் மதிப்பேன். நேர்மையாக நடப்பேன் என்று வாக்குறுதி அளித்து வேண்டியது. தமனகன் வேறுவிதமாக உறுதிமொழியை எதிர்பார்த்தது. முன்னிருந்த மந்திரிகளையோ, அதிகாரிகளையோ பதவியிலிருந்து நீக்கக் கூடாது. பிறரது பிழைப்பை நான் கெடுக்க மாட்டேன். அவர்களது செயல்முறையில் குறுக்கிட

மாட்டேன் எனது ஆலோசனைகளைத் தனிமையில் அளிப்பேன். அவற்றை ஏற்பதும், ஏற்காததும் தங்கள் விருப்பம். எனது நன்மதிப்பிற்குக் குந்தகம் ஏற்படக் கூடாது. இவை ஏற்கப்பட்டால் மந்திரியாகிறேன்'' என்றது. சிங்கம் சம்மதித்தது.

தமனகனின் பதவி உயர்வை மற்ற மிருகங்கள் ஏற்கவில்லை. அவை தமனகனுக்கு எதிராகக் கூட்டணி சேர்ந்தன. சிங்கத்திற்கும், தமனகனுக்குமிடையே உள்ள நட்பைப் பிளக்க முற்பட்டன. சிங்கத்திற்காக ஒதுக்கிய உணவைத் திருடி தமனகனின் வீட்டினுள் வைத்தன. சிங்கம் தனக்கென வைத்திருந்த உணவு காணாமல் போனதைக் கண்டு வெகுண்டது. மிருகங்களின் சூழ்ச்சியை அறியாததால் தமனகனின் வீட்டில் உணவு மறைக்கப்பட்டுள்ளதை அறிந்ததும் தமனகனின் வீட்டைச் சோதனை செய்ய அதிகாரிகளை அனுப்பியது. தமனகன் அரசருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததாக அறிவித்துப் பதவியிலிருந்து விலக்கி விட்டது.


சிங்கத்தின் தாய் தமனகனின் நடைமுறையில் அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருந்தது. தன் மகன் எதனையும் தீர விசாரியாமல் சூழ்ச்சிக்காரர்களின் வசப்பட்டு நேர்மையற்றுத் தமனகனுக்குத் தண்டனை விதித்ததையும், மந்திரி பதவியிலிருந்து நீக்கியதையும் தவறான போக்கு எனக் கண்டு மகனைக் கண்டித்தது.

'காண்பதனைத்தும் மெய்யாக இருப்பதில்லை. ஆகாசம் கவிழ்த்த சட்டிபோல் காணப்படுகிறது. ஆகாயத்திற்கு வடிவமில்லை. இரவில் மின்மினிப் பூச்சி நெருப்பு கங்கு போல் காணப்படுகிறது. அது நெருப்பா? கண்டதைத் தீர விசாரியாமல் மெய்யென நம்பலாமா? பூர்ண நம்பிக்கையுடன் அமைந்த உறுதி கொண்ட நட்பை ஏமாற்றுக்காரர்களின் சூழ்ச்சி அழிக்க இடம் தரலாமா?' என்று தாய் கேட்டதும் சிங்கம் தன் தவற்றை உணர்ந்து தீர விசாரித்தது. உண்மையை உணர்ந்தது. தமனகனை விடுதலை செய்து மன்னிப்பு கோரியது. முன்போல் மந்திரியாக நீடிக்குமாறு வணங்கிக் கேட்டுக் கொண்டது.

தமனகன் மறுபடி பதவி ஏற்க மறுத்தது. 'அரசே! உமக்கோ என்னிடம் நம்பிக்கையில்லை. நான் பலவீனன். அதனால் உம்மிடம் எனக்குப் பயம் உள்ளது. பரஸ்பரம் நட்போ நம்பிக்கையோ இனி ஏற்பட வாய்ப்பில்லை. நீர் உறுதி செய்தபடி என்னை மதிக்கவில்லை. விரிந்து உடைந்து போன நட்பை இனி ஒட்ட முடியாது. நான் என் வழியில் செல்கிறேன் என்றது. மயானத்தில் தனித்து காய்கனிகளை உண்பதில் அதற்குப் பெருத்த நிம்மதி.'

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



காலப்போக்கிலே, பல்வேறு காரணங்களின் விளைவாக, (அதில் தருமத்தில் அக்கறையின்மையும், ஒற்றுமைமின்மையும் ஒரு காரணம்) பல கோயில்கள் பராமரிப்பின்றி இருக்கின்றன, இன்றைக்கு பக்கத்திலே இருந்தாலும், பழகக்கூடாத நிலையிலே சென்னையிலே பல லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். எங்கோ சென்று கோவில்களை தரிசிக்கிறார்கள். பக்தி மார்க்கத்தில் ஈடு படுகிறார்கள். அவர்களுடைய கவனத்திற்கு, இது போன்ற கிராமப்புற கோவில்களின் நிலைமையை எடுத்து சொல்லி, கிராமத்தின் மத்தியிலே இருக்க கூடிய மக்களுக்கு எடுத்து சொல்லி, விழிப்புணர்வை ஏற்படுத்தி, வெளி நகரங்களில் இருப்பவர்கள் பண உதவிகள் செய்யலாம், அறிவுரைகள் சொல்ல முடியும். சட்ட ரீதியாக செய்யக்கூடிய நன்மைகளை அவர்கள் செய்ய முடியும். ஆனால், உழவாரப் பணி செய்வதோ, அங்கு அந்த கோவில்களை சுத்தமாக வைத்துக் கொள்வதோ, கிராமத்தை சார்ந்தவர்களால்தான் அதை எளிதாக செய்ய முடியும். இந்த உழவாரப்பணி, நித்திய பூஜை, கோவிலை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், தினசரி கோலம் போடுதல், மாவிலை கட்டுதல், இதெல்லாம் மொபைல் மூலமாக செய்ய முடியாது. மொபைல் மூலம் பணம் அனுப்பலாம். எல்லாவற்றிக்கும் ஒரு முறை இருக்கிறது. மக்கள் தங்களுடைய ஆன்மீகப் பொறுப்பை உணர்ந்து, ஆன்மீக கடமையை உணர்ந்து, அவரவர்கள் செய்ய வேண்டிய இறைவழிபாட்டு முறைகளை பயின்று, இந்த கிராமப்புற கோவில்களை, முன்னோர்களுக்கு செய்யக்கூடிய மரியாதையாகவும் நினைத்து, முன்னோர்கள் நமக்களித்த பரிசுகளை தக்கவைத்து கொள்ளக்கூடிய முயற்சியாகவும் நினைத்து, இந்த கிராமப்புற கோவில்களை நல்ல முறையிலே, கிராமத்திலே இருப்பவர்களும், நகரத்திலே இருப்பவர்களும் ஒன்று சேர்ந்து பராமரிக்க வேண்டும். கோவில்கள் கிராமத்திலே இருந்தாலும், அந்த கோவிலிலே குடிகொண்டு இருக்கின்ற இறைவனின் அருளை பெறுபவர்களாக அனைத்து மக்களும் இருக்கிறார்கள். ஆகவே, நகரத்திலே இருப்பவர்களும், கிராமத்திலே

இருப்பவர்களும், இதை வளர்த்து, நல்ல ஒரு பசுமையான சூழ்நிலையும் வளர்ந்து, அங்கு நல்ல விவசாயம் வளர்ந்து, நல்ல நந்தவனம் வளர்ந்து, நகரத்தில் இருக்ககூடிய கோவில்களுக்கு தேவையான புஷ்பங்கள், துளசி, வில்வம் போன்ற பூஜை பொருட்கள், கிராமத்திலிருந்து நகரத்திற்கு அனுப்பி வைத்து, கோவில்களின் வருமானங்களும் அதிகரித்து, கோவில்களில் தினசரி வழிபாடு செய்யக்கூடிய, அனைத்து வயதினர்களும் சார்ந்த மக்கள், குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை அனைவரும் பங்கு பெற்று, கோவில்கள் என்பது நமக்காக ஏற்படுத்தப்பட்டது. நம்முடைய தர்ம சிந்தனைகளை வலுப்படுத்த ஏற்பட்டவை கோவில்கள். நம்முடைய பரம்பரைக்கும் அருளை பெற்றுத்தரக் கூடியவைகள் கோவில்கள், ஐந்து தலைமுறை, பத்து தலைமுறை-அதைத்தான் குலதெய்வம் என்று நாம் குறிப்பிடுகிறோம். அந்த கோவில்களை முறையாகவும், முழுமையாகவும் பாதுகாத்து, நம்முடைய சிற்பக்கலை, நம்முடைய சங்கீதம், நம்முடைய ஆயுர்வேதம், நம்முடைய பக்தி மார்க்கம், நம்முடைய யோக சாஸ்திரம், பிராணாயாமம் செய்வது, மௌனமாக இருப்பது, இதெல்லாம் கோவில் சந்நிதியிலே நாம் செய்ய கூடிய யோக அப்யாச முறைகள். அதைபோல் ஸ்லோகங்களை சொல்வது, பாராயணங்களை பாடுவது, கிராமங்களில் இருக்க கூடிய பஜனை மடங்கள் மூலமாக இறைவனுடைய திவ்ய நாமங்களை வெட்கத்தை விட்டு, இறைவனுடைய பிரசாதமான திருநீரையோ, திருமண்ணையோ, சந்தனத்தையோ, நாம் சங்கோஜம் இல்லாமல், பிரசாதம் என்ற எண்ணத்தோடு அணிந்து கொள்ளக்கூடிய தைரியத்தையும், நம்பிக்கையும், அன்பையும் பெற்று, அந்த பஜனை பாடகர் பாட்டுகளை குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்து, மார்கழி மாதத்தில் முப்பது நாட்களும், திருப்பாவை, திருவெம்பாவை பஜனை பாடல்களை பாடி, கிராம பிரதட்சிணம் செய்யகூடிய முறையை, வயதானவர்களுக்குதான் என்று வைத்துக் கொள்ளாமல், இளைஞர்களையும் அதில் ஈடுபடுத்தி, கோவில் முன்பாக பசுஞ்சாணி பூசி, கோயம்பத்தூர் பக்கத்திலே, பசும் சாணி எல்லாம் நன்றாக பூசி, வீட்டிலே எல்லாம் கோலங்கள் எல்லாம் போடுகிறார்கள். அங்கு கோசம்ரக்ஷனம் செய்து, கோலங்கள் எல்லாம் போட்டு, நம்முடைய கலாசாரத்தை, நம்முடைய பாரம்பரியத்தை-அது உணவாக இருக்கட்டும், உடலாக இருக்கட்டும், முறைகளாக இருக்கட்டும்-நமது இந்து மதத்தில் அனைத்து பழக்க வழக்கங்களையும், நாம் கிராமப்புறங்கள் தோறும் ப்ரசாரம் செய்து இந்த பக்தி மார்க்கத்தை பரப்ப வேண்டும்.

இந்த பக்தி மார்க்கத்தின் மூலமாக, மக்களின் மனநிலை, தன்னம்பிக்கை வளர்ந்து, concentration , ஒருமுகத்தன்மை படிப்பிலே, வியாபாரத்திலே, தொழிலே அந்த ஒரு முகத்தன்மை என்பது வளர்ந்து, வளர்ச்சி என்பது ஏற்பட வேண்டும். ஆகவே, இந்த கிராமப்புற, நகர்ப்புற இணைப்பாக இந்த திருக்கோவில் வழிபாட்டு குழுவுடைய பணிகள் அமைந்து நடைபெற்று வருகின்றன. ஆனால், பணிகள் நிறைய இருக்கின்றன. பல கிராமங்கள் இன்னும் ஆரம்பிக்க பட வேண்டிய நிலையில் இந்த சேவை ஆரம்பிக்க படவேண்டிய நிலை இருக்கிறது. தற்பொழுது எட்டாவது பிளாக் வட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கோவில் வட்டத்துடைய கிராமப்புற பழந்திருக்கோவில்கள் அட்டவணை, ஏற்கனவே உத்தரமேருர், பூந்தமல்லி இது போன்ற, பல வட்டங்களின் புஸ்தகங்கள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. அந்த வரிசையிலே சென்னையில் இருக்க கூடியவர்கள் விடுமுறை நாட்களிலே, அல்லது அவர்களுக்கு சௌகரியமான நாட்களிலே, கிராமப்புற கோவில்களை பார்ப்பதற்கும், ஒரு கிராமத்து கோவிலையோ அல்லது இரு கிராமத்து கோவில்களையோ பார்பதற்கும் வசதியாக இந்த அட்டவணை வெளியிடபட்டு இருக்கின்றது. அதைப்போன்று பொழுதுபோக்கு, பொழுதை எப்படி போக்குவது-அந்த நமதுடைய சமுதாயத்திலே பக்தி மூலமாக, இறைவனின் பெயரை சொல்வதின் மூலமாக அல்லது இப்பொழுது எடுத்துக் கொண்டு வந்தார்கள் இறைவனுடைய பெயரை எழுதுவது மூலமாக , நாமாக்களை-நாமதேவர்- நாமாக்களை எழுதுவதின் மூலமாக, நல்ல காரியத்திலே நம்முடைய நேரத்தை செலவிடுவது என்கிற ஒரு பழக்கத்தை ஏற்படுத்தி, பஜனை பாடல்களை சொல்லிக்கொடுத்து-ஹரிதாஸ்ஜி ஸ்வாமிகள் பஜனை பாடல்கள் பிரசாரம் செய்து கொண்டு இருந்தார். விசேஷமாக செய்து கொண்டு இருந்தார். அவர்களுடைய சகோதரிகள் பாடினார்கள். பெரியவர்களோடு ஆசியோடு, கலவையில் இருந்தபொழுது, பத்து வருஷங்களுக்கு முன்பாக இந்த பஜனை உபகரணங்களை பல கிராம கோவில்களுக்கும், பஜனை மடங்களுக்கும் பெரியவர்கள் அளித்தார்கள். தாளம், மத்தளம், ஹார்மோனியம் அது போன்று, இந்த முறையும் சில நூல்கள் அளிக்க இருக்கிறார்கள். பன்னிரு திருமுறை புஸ்தகங்களை அளிக்க இருக்கிறார்கள். (தேவாரம்). பல ஊர்களிலும் திருவாசகம் முற்றோதல் நடைபெற்று வருகின்றது. சிவபுராணம், பிரதோஷ ஆலய வழிபாடு என்ற புஸ்தகத்தை அச்சிட்டு இலவசமாக பல இடங்களிலேயும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இது போன்று பல பணிகளை, பல அன்பர்களுடைய (திணிடூதணஞுனுனுணுாண்) ஆர்வமுடைய கிராமத்தில் இருக்க கூடிய மக்களின் உழைப்பு, ஒத்துழைப்பு காரணமாக

ஒரு விழிப்புணர்வு அதிகரித்து, பல நல்ல பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு, மேற்கூரை அமைத்தல், பிரதோஷ வழிபாடு-இது போன்ற பல பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணியில் அனைத்து மக்களும், கிராமத்திலே இருப்பவர்களும், நகரத்திலே இருப்பவர்களும் இணைந்து செயல் பட்டு, நம்முடைய தர்மத்தின் மீது ஈடுபாட்டை அதிகரித்து, இந்த தர்மம் என்பது இன்றைக்கு தொடங்கப் பட்டதல்ல. இன்றோடு நின்று விடாமல் தொடர்ந்து, இந்த தர்மம் என்பது பல முறைகளையும் காக்க கூடியது. ஆகவே, அனைத்து தலைமுறைகளை சார்ந்தவர்களும், தர்மத்தை பின்பற்ற வேண்டும், வளர்க்க வேண்டும், காக்க வேண்டும்.

தர்மோ ரக்ஷதி ரக்ஷித: என்றவிதத்திலே, பெரியவர்களின் ஆசியோடு அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இந்த திருக்கோவில் வழிபாட்டுக்குழுவை அதே பக்தி உணர்வுடன், அதே உற்சாகத்துடன் தொடர்ந்து செயல்பட்டு, மென்மேலும் நம்முடைய கலாசாரத்தை, நம்முடைய விளையாட்டு முறைகளை, நம்முடைய இசை, நம்முடைய இறை உணர்வை நாம் வளர்த்து, அந்த கோவில்களின் மூலமாக நமக்கு சாந்தியையும், வளர்ச்சியையும், சுபீக்ஷத்தையும் அருள இறைவனை பிராத்திக்கிறோம்.

வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா



**வாசகர்கள் அனைவருக்கும்**
**மகர சங்கராந்தி வாழ்த்துக்களைத்**
**தெரிவித்துக் கொள்கிறோம்**

# கிர்மீரவதபர்வம்

## (யுதிஷ்டிரர் தௌமியர் உபதேசப்படி ஸூர்யனைத் துதித்ததும்; ஸூரியன் அக்ஷய பாத்திரம் கொடுத்ததும்)

சௌனகர் இவ்விதம் சொல்லியதைக் கேட்ட குந்திபுத்திரரான யுதிஷ்டிரர், பிராம்மண ஸ்ரேஷ்டரும் கௌரவிக்கத்தக்க வாக்கியத்தையுடையவரும், இன்சொல் சொல்லுபவரும், புரோகிதருமான தௌம்யருக்குச் சமீபத்தில் வந்து நமஸ்கரித்து ஸகோதரர்களின் மத்தியில் பின்வருமாறு சொல்லலானார். (வனத்தைக் குறித்துப்) புறப்பட்ட எங்களை வேதத்தின் கரையை அடைந்த பிராம்மணர்கள் பின் தொடர்ந்து வந்திருக்கின்றார்கள். அதிக துக்கத்துடன் கூடிய நான் (இவர்களைப்) போஷிப்பதற்குச் சக்தியுள்ளவனாக இல்லை; தானசக்தியும், எனக்கு இல்லை. ஓ! பகவானே! இந்த விஷயத்தில் என்னால் என்ன செய்யத் தகுந்தது? அதனை எனக்குச் சொல்லும் என்றார். யோகதர்மானுஷ்டானம் செய்கிறவர்களுள் சிறந்தவரான அந்தத் தௌம்யர் ஒரு முகூர்த்தம் தியானம் செய்து யோகத்தால் அந்தக் காரணத்தைக் கண்டு யுதிஷ்டிரரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்.

'முற்காலத்தில் ஸ்ருடிக்கப்பட்ட பிராணிகள் பசியால் மிகக் கஷ்டப்பட்டன. அப்பொழுது, ஸூர்யன் பிதாவைப் போல அவற்றின் விஷயத்தில் தயையினாலே உத்தராயணம் சென்று கிரணங்களால் ஜலங்களை எடுத்துத் தக்ஷிணாயனத்தைத் திரும்பவும் அடைந்து ஜலத்தால் பூமியை நிறைத்தான்'. பிறகு, (சந்திரன்) க்ஷேத்திரமான அந்தப் பூமியில் ஸூரியனுடைய தேஜஸை எடுத்து ஜலத்தால் ஓஷதிகளை உண்டு பண்ணினான். சந்திரன் தேஜஸினால் (மேகத்தினால்) நனைக்கப்பட்ட ஸூரியன் ஜகத்தை உண்டு பண்ணினான். ஆகையால் பரிசுத்தமான ஆறுரஸமுள்ள ஔஷதிகள் பூமியில் பிராணிகளுக்கு அன்னமாகின்றன. இவ்விதம் ஸூர்ய விகாரமான அன்னமன்றோ பிராணிகளுக்குப் பிராணதாரணமாகிறது. இந்த ஸூர்யன் எல்லாப் பிராணிகளுக்கும் ரக்ஷகன். ஆகையால், அவனைச் சரணமடை. பூர்ணமான தவத்தைச் செய்து பிறப்பாலும், செய்கையாலும் சுத்தியை அடைந்த எல்லாப் பிரஜைகளையும் மஹாத்மாக்களான அரசர்கள் காப்பாற்றுகிறார்கள். விரதானுஷ்டானத்துடன் கூடிய தியானத்திலிருக்கும் 1. பௌமன், 2. கார்த்த வீர்யன், 3. வேனபுத்ரனான பிருது, 4. நகுஷன் ஆகிய இவர்களால் பிரஜைகள் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டன. பாரதரே அப்படியே, தர்மாத்மாவான நீரும் கர்மாவால் சுத்தி அடைந்து தவத்தைச் செய்து, தர்மத்தால் பிராம்மணர்களைக் காப்பாற்றும் என்கிறார்.

இவ்விதம் அந்தக் காலத்திற்கேற்ற வார்த்தையைத் தௌம்யர் சொல்லக் கேட்ட யுதிஷ்டிரர், அவரிடமிருந்து எல்லாம் புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடிய மந்திரத்தை உபதேசம் பெற்றார். அஷ்டாக்ஷரமென்று சிறந்த மந்திரமானது ஸம்ஸார துக்கத்தை அடைந்தவர்களுக்கு எப்போதும் பிரியமானது. பிராம்மணர்களுக்கு அன்னத்திற்காக நியமத்திலிருக்கிறவரும், மனத்தை அடக்கியவரும் உறுதியான வ்ரதமுள்ளவரும் (ஸ்நானத்தால்) சுத்தமான சரீரமுள்ளவருமான தர்மபுத்ரர் மேலான தவத்தைச் செய்தார். அந்த அரசர் புஷ்பம் முதலிய பூஜைக்குரிய பொருள்களாலும், பலிகளாலும் ஸூர்யனைப் பூஜித்து ஸூர்யனுக்கு எதிர்முகமானார். தர்மாத்மாவான தர்மபுத்திரர் கங்கா ஜலத்தை ஆசமனம் செய்து இந்திரியங்களை ஜயித்துக் காற்றைப் புசித்து மனோவியாபாரத்தை நிறுத்தி ப்ராணாயாமம் செய்து கொண்டு நின்றார். பிறகு, சுத்தரான அவர் சுத்தமான வாக்குக்களால் ஸ்தோத்திரம் செய்து ஆரம்பித்தார்.

'பானுவே ! நீர் ஜகத்துக்குக் கண் போன்றவர். எல்லா ஜீவர்களுக்கும் நீரே ஆத்மா. ஆகாச முதலிய எல்லாப் பூதங்களுக்கும் காரணம் நீரே. கர்மானுஷ்டானம் செய்பவர்களுடைய ஆசாரமும் நீரே. எல்லா ஞானிகளாலும் அடையப்படுபவரும் நீரே. மனத்தை அடக்கும் யோகிகளுக்கும் நீரே முக்யகதி. கதவும் தாளும் இல்லாத மோக்ஷவாயிலும் நீரே. நீரே முமுக்ஷுக்களால் அடையப்படுபவர். உம்மால் உலகம் தரிக்கப்படுகிறது. உம்மால் உலகம் பிரகாசிக்கப்படுகிறது. உம்மால் சுத்தமாக்கப்படுகிறது; ஓ! ரிஷிக் கூட்டங்களால் பூஜிக்கப்பட்டவரே! வேதத்தின் கரைகண்ட பிராம்மணர்கள் காலத்தில் உம்மைத் தொழுது நின்று தமக்குரிய வேதத்தில் சொல்லிய மந்திரங்களால் பூஜிக்கின்றார்கள். ஸித்தரும், சாரணரும், கந்தர்வரும், யக்ஷரும், குஹ்யகரும், பன்னகரும் வரத்தை அடைய விரும்பி ஆகாயத்தில் போகின்ற உம்முடைய திவ்யரதத்தைப் பின் தொடருகின்றார்கள். முப்பத்து மூன்று தேவதைகளும், விமானத்தோடு சஞ்சரிக்கும் கணங்களும், இந்திரனும், உபேந்திரனும் உம்மைப் பூஜித்து ஸித்தியை அடைந்திருக்கிறார்கள்.' வித்தியாதரர்களுள் சிறந்தவர்கள் திவ்யமான மந்தாரமலைகளால் உம்மைப் பூஜித்து (இம்மையில்) சீக்கிரம் இஷ்டத்தை அடைந்து (மறுமையில்) உம்மையே அடைகிறார்கள். தேவலோகத்திலுள்ள குஹ்யர்களும், தேவஸம்பந்தமும் மனுஷ்ய ஸம்பந்தமுள்ள ஏழு பித்ருகணங்களும் உம்மையே பூஜித்துச் சீக்கிரமாக மேன்மையை அடைகின்றார்கள். வஸுக்களும், மருத்துக்களும், ருத்ரர்களும், ஸாத்யர்களும், மரீசிபர்களும், வால்கில்யர் முதலிய ஸித்தர்களும் பிராணிகளுள் சிறப்பை அடைந்தார்கள்.

(தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ப்ரஹ்லாத சரித்திரம்

ஸ்ரீமத் பாகவத சுலோகங்கள் அடிப்படையில்

1. பகவானிடத்தில் ஆசையாலோ, பகையாலோ, பயத்தாலோ, பற்றினாலோ பக்தியினைச் செலுத்தும் மனம் உடையோர் உள்புகுந்து, அவனால் அவர்களின் பாபங்களை எல்லாம் போக்கப்பட்டு அவன் உலகை அடைந்திருக்கிறார்கள்.

2. 'எம்பெருமானிடம் காதலால் கோபியர்களும், பயத்தினால் கம்ஸனும், பகைமையால் சேதிநாட்டு அரசன் சிசுபாலன் முதலியோரும், உறவின் தன்மையால் ஆயர்பாடி மக்களும், நட்பினால் நீங்களும் பக்தியால் நாங்களும் என்று சுகபிரம்மம்' சொன்னார்.

3. அதற்கான சான்று கூறுகிறேன் கேளுங்கள். ஒரு சமயம் பிரம்மாவின் புத்ரர்களான ஸனக, ஸனாதன, ஸனத்குமாராதிகள் நால்வரும் மூன்று உலகங்களிலும் சஞ்சரித்தவர்களாய் யாத்ருச்சிகமாக (எதிர்பாராத வகை) விஷ்ணுலோகம் சென்றார்கள்.

4. ஐந்து வயது நிரம்பிய பிள்ளைகளாக, முன்னோர்களுக்கெல்லாம் முன்னவர்களான அவர்கள் திசைகளையே ஆடையாக உடையவர்களாய் (நிர்வாணம்) செல்ல அவர்களை குழந்தைகள் என்று நினைத்து துவாரபாலகர்கள் தடுத்து விட்டார்கள்.

5. ரஜஸ், தமோ குணங்களை உடைய நீங்கள் மதுசூதனன் திருவடியில் துவார பாலகர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள், பாபிகள், அறியாதவர்கள். எனவே அஸுரப் பிறவியை அடைய வேண்டியது என சபித்தனர்.

6. அப்படி சபிக்கப்பட்டவர்கள் (ஹிரண்யன் ஹிரண்யாக்ஷன்) மந்தர மலையின் அடிவாரத்தில் மேலே உயர்த்திய கைகளுடன், விண்ணையே நோக்கிய பார்வையராய், கட்டை விரலால் நின்று கொண்டு மிகக் கொடிய தவம் செய்தனர்.

7. அப்படி அவர்கள் செய்த தபமாகிய நெருப்பு, அவர்கள் தலைமையிலும் புறப்பட்டு தேவர்களின் இருப்பிடத்தை அடைந்தது.

8. தவம் செய்த அவர்கள் பற்றினால் சூழப்பட்டதையோ புல், புழுக்கள், செல் இவைகளால் அரிக்கப்பட்ட தசை, மாமிசம் இவைகளை உடையவர்களாய் விளங்கினார்கள்.

9. அவர்கள் எதிரில் பிரம்மா தோன்றி காஸ்யபரின் மகனான ஹிரண்ய கசிபுவே எழுந்திரு. நான் வரமளிப்பவன். உங்களுக்கு விருப்பமான வரத்தைப் பெற்றுக் கொள்.

10. உங்கள் அடியவனான எனக்கு வரம் கொடுப்பதானால், 'வரம் அருள்பவர்களில் சிறந்தவரே. உலகில் உள்ள சிறந்தவைகளான பஞ்ச பூதங்களால் எனக்கு மரணம் இல்லாமல் இருக்கட்டும்'.

11. எனக்கு வீட்டின் உள்ளே, வெளியே, பகலில், இரவில் ஆயுதங்களால், பூமியில், விண்ணில், மனிதர்களால், மிருகங்களால் மரணம் இல்லாமல் இருக்கட்டும்.

12. உம்மைப் போன்ற உலக நாயகர்களால், தபம், யோகம் இவற்றில் சிறந்தவர்களால் ஒருபொழுதும் என்னை அழிக்கக்கூடாத வரம் வேண்டும்.

13. இவ்வாறு வரங்களைப் பெற்ற அந்த அஸுரன், பொன் மயமான தேஹம் பெற்று, தன் சகோதரனைக் கொன்ற பகவானிடம் பகைமை கொண்டான்.

குறிப்பு : ஹிரண்யாக்ஷன் எம்பெருமானால் கொல்லப்பட்டான். அவன் ஹிரண்யனின் சகோதரன்.

14. தேவர்கள் மனம் அடங்கியவர்களாய், குற்றமற்றவர்களாய், ஒருநிலைப் பெற்ற அறிவினராய், தூக்கம் விட்டவர்களாய், எம்பெருமானை சரணடைந்தனர்.

15. தேவர்களே! பயப்படாதீர்கள். உங்கள் அனைவர்க்கும் மங்களம் உண்டாகட்டும். என்னுடைய கடைக்கண் நோக்கு எல்லா உயிர்களுக்கும் எல்லா உயர்வுகளும் தரக்கூடியது.

16. எப்பொழுது வேதங்களிடத்தும், தேவதைகளிடத்தும், பசுக்களிடத்தும், அந்தணரிடத்தும், நல்லோரிடத்தும், தர்மத்தினிடமும், என்னிடமும் பகைமையானது ஏற்பட்டதோ அப்பொழுதே அவன் அழியப் போகிறான்.

17. பகைமை உணர்வற்ற, அமைதியான, தன் மகனான உயர்ந்த ப்ரஹ்லாதனுக்கு எப்பொழுது பகைமையினால் உண்டு துரோகம் செய்ய நினைக்கிறானோ, அப்பொழுது அவனால் பெறப்பட்ட வரங்களை வென்று அவனை அழிக்கிறேன்.

(தொடரும்)

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 3

பி. ஆர். கண்ணன்

### மது கைடப வதம்



ஒரு பிரளயம் முடிந்து ஸ்ருஷ்டி ஆரம்பிக்குமுன்னர், விஷ்ணுவும், பிரம்மாவும் மாத்திரமே இருந்தபோது, விஷ்ணுவின் காதிலிருந்து, இரு அசுரர்கள் - மது, கைடபன் - வெளிவந்தனர். ஸாகரஜலத்தில் அதிவேகமாக அவர்கள் வளர்ந்து, பேருருவமெடுத்தனர். தேவியை ஸ்மரிக்க, ஆகாசத்திலிருந்து வாக்பீஜம் (ஐம்) கேட்க, 1000 வருஷங்கள் அவ்வசுரர்கள் அந்த பீஜாக்ஷர ஜபம் செய்யவே, பிரம்மா தரிசனம் தந்து, அவர்களுக்கு நினைத்தபோது (ஸ்வச்சந்த) மரணம் என்ற அரிய வரம் தந்தருளினார். வரத்தினால் திமிர் அடைந்த அவர்கள், யுத்தம் பண்ணவேண்டும் என்ற வெறியினால் உந்தப்பட்டு, வரம் கொடுத்த பிரம்மாவையே கமலாஸனத்தில் வீற்றிருந்ததைக் கண்டு, யுத்தத்திற்கழைத்தனர். பயந்துபோன பிரம்மா, நித்திரையிலிருந்த விஷ்ணுவை எழுப்ப வெகு பிரயத்தினப்பட்டார். ஆனால் விஷ்ணு எழுந்திருக்காததைக் கண்ட அவர், நித்திரைக்கு விஷ்ணு வசமாகிவிட்டதால், நித்திரைக்கு ஸ்வாமினியான தாமஸி தேவி விஷ்ணுவிற்கு ஸ்வாமினியாக இருப்பதால், அந்த தேவியை நோக்கி உருக்கமாகப் பிரார்த்தித்தார்: ‘வேதங்களாலும் அறியவொண்ணா லீலைகளைக் கொண்ட நீயே ஸ்வாஹா, ஸ்வதா என்ற ரூபங்களாக இருந்து, தேவர்களுக்கும், பித்ருக்களுக்கும் மனிதர்கள் ஸமர்ப்பிக்கும் ஆஹுதிகளை அக்கினியின் மூலமாக சேர்ப்பித்து, கருணை காட்டுகிறாய். இப்போது என்மீது தயை கொண்டு, விஷ்ணுவை எழுப்பு, அல்லது நீயே இவ்வசுரர்களை வதைப்பாயாக. உன் பிரதம ஸ்ருஷ்டியான நான் இவர்கள் கையில் கொல்லப்பட்டால், உனக்கு பெரும் அபகீர்த்தியாக ஆகும்‘ என்று. தேவி தரிசனம் தந்தாள்; அனுக்ரகித்தாள். தாமஸி சக்தி விஷ்ணுவின் சரீரத்திலிருந்து

வெளிக்கிளம்பவே, உடனே விஷ்ணு விழித்துக் கொண்டார். அவர் மது கைடபர்களை தன்னுடன் யுத்தம் செய்ய அழைத்தார். மல் யுத்தம் 5000 வருஷங்கள் நீடித்தது. விஷ்ணுவுடன் மதுவும் கைடபனும் ஒருவர் மாற்றி ஒருவர் மல் யுத்தம் செய்தனர். விஷ்ணு களைத்துப்போய் அவ்வசுரர்களின் பராக்கிரமங்கண்டு ஆச்சரியப்பட்டார். தான் சிரமபரிகாரம் செய்யப் போவதாகச் சொல்லி, விஷ்ணு அவ்விடத்தைவிட்டு அகன்று, தேவியைப் பிரார்த்தித்தார். ஸ்வச்சந்த மரண வரம் உள்ள அவ்வசுரர்களை எவ்வாறு வதைப்பேன் என்று கவலைப்பட்ட விஷ்ணுவிடம், தேவி, தான் வக்கிரப் பார்வையினால் அவர்களை ஆகாசத்திலிருந்தபடியே மோகிக்கும்படி செய்வேனென்று கூறி, வஞ்சனையின் துணைகொண்டு, வதம் செய்யும்படி அருளினாள். அவ்வாறே, மோகமடைந்த அசுரர்களிடம் விஷ்ணு சென்று அவர்களின் பராக்கிரமத்தை வெகுவாக மெச்சிப் பேசி, வரம் தருவதாகக் கூறினார். அசுரர்களோ, தாங்கள் கொடையாளிகளேயன்றி, யாசகர்கள் இல்லை என்று அலக்ஷியமாகக்கூறி, விஷ்ணுவிடம் வரம் கேட்குமாறு சொன்னார்கள். உடனே, நீங்கள் என் கையினால் மரணமடையவேண்டும் என்ற வரனை விஷ்ணு கேட்டார். திகைத்துப்போன அவர்கள், பிரளய நீரில்லாத இடமே இல்லாததை உபயோகப்படுத்தி, நீர் சிறிதுமில்லாத இடத்தில் வதம் செய்யலாம் என்றனர். விஷ்ணு அவர்களைப்பற்ற முயல்கையில், அவர்கள் இன்னும் பெரிய உருவம் எடுத்துக் கொண்டதைப் பார்த்த விஷ்ணு, தான் மிகப்பெரிய உருவை சட்டென எடுத்துக்கொண்டு, அவ்வசுரர்களை, தன் மடியின் மீது கிடத்தி, சக்கிராயுதத்தினால் சிரச்சேதம் செய்தார். அசுரர்களின் 'மேதஸ்'- கொழுப்பு ஸமுத்திரத்தில் பரவியதால், அப்பகுதி பூமியாயிற்று. பூமிக்கு மேதினி என்ற பெயர் உண்டாயிற்று. பூமியில் அசுரர் கொழுப்பு உள்ளதால், மண் தின்னக்கூடாது என்ற விதி உள்ளது.

ஸ்ருஷ்டி முழுவதும் ஸத்வம் (அமைதி, நற்குணங்கள்), ரஜஸ் (செயல்வேகம், காமம், க்ரோதம்). தமஸ் (சோம்பல், ஹிம்ஸை) என்ற மூன்று குணங்களால் ஆனது. மனிதனும் இம்மூன்று குணங்களைக் கொண்டே வாழ்கிறான். தமஸ், ரஜஸ் குணங்களை அடக்கி, ஸத்வ குணத்தை வளர்த்துக் கொண்டு வாழவேண்டும் என்று சாஸ்திரங்கள் வலியுறுத்தும். மது கைடபர்கள் தமோ குணமே உருக்கொண்டு, காரணமின்றி, பிரம்மாவிடம் யுத்தம் செய்ய முற்பட்டனர். விஷ்ணுவின் தமஸ் விலகி, அவர் யுத்தம் செய்கையில், அவருக்கு 5000 வருஷங்கள் ஆனது, அசுரர்களின் அதீதமான தமோ குணத்தைக் காட்டுகின்றது. அதாவது, நாம் தமோ குணத்தை விருத்தியாகும்படி விட்டுவிட்டால், அதை ஒடுக்க பின்னர் எடுக்கும் பிரயத்தினம் மிகவும் கஷ்டமானது. ஆகையால், எப்போதும் ஜாக்கிரதையாக இருந்து, தமோ குணத்தையும், ரஜோ குணத்தையும், ஸத்துவம் என்ற அங்குசத்தினால் நன்று அடக்கிவைப்பது அத்தியாவசியம் என்ற பாடத்தை நமக்கு போதிக்கிறது மது கைடப வத சரித்திரம்.

(வளரும்)

# தை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்


| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 15/01/20 | புதன் | பொங்கல் பண்டிகை<br>உத்தராயண புண்யகாலம் |
| 20/01/20 | திங்கள் | ஏகாதசி |
| 20/01/20 | திங்கள் | அனுஷம் தேர் |
| 20/01/20 | திங்கள் | அனுஷம் பாராயணம் |
| 21/01/20 | செவ்வாய் | துவாதசி |
| 22/01/20 | புதன் | ப்ரதோஷ பூஜை |
| 22/01/20 | புதன் | மூலம் தேர் |
| 24/01/20 | வெள்ளி | தை அமாவாசை |
| 24/01/20 | வெள்ளி | உத்ராடம் தேர் |
| 24/01/20 | வெள்ளி | உத்ராடம் பாராயணம் |
| 26/01/20 | ஞாயிறு | அவிட்டம் தேர் |
| 26/01/20 | ஞாயிறு | அவிட்டம் பாராயணம் |
| 29/01/20 | புதன் | வஸந்த பஞ்சமி |
| 01/02/20 | சனி | ரத சப்தமி |
| 02/02/20 | ஞாயிறு | பீஷ்மாஷ்டமி |
| 05/02/20 | புதன் | ஏகாதசி |
| 06/02/20 | வியாழன் | திலபத்ம துவாதசி |
| 07/02/20 | வெள்ளி | ப்ரதோஷ பூஜை |
| 08/02/20 | சனி | தை பூசம், பௌர்ணமி பூஜை |
| 17/01/20, 24/01/20, 31/01/20- 07/02/20 வெள்ளிக் கிழமை பூஜை | | |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 20

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

## ஷண்முக முதலியார்

நான் சைவன். தினம் சிவபூஜை செய்வது வழக்கம். மகாபெரியவா மீது அளவற்ற பக்தி எனக்கு உண்டு. அவரிடமிருந்து உபதேசம் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று நெடு நாளைய அவா. நானோ மகா செவிடு. எல்லாருக்கும் உபதேசம் செய்வாரா எனும் பயம். ஒரு நாள் கலாசபாளையம் எனும் ஊருக்கு அவர் வந்திருந்தார்.



என் ஊருக்குப் பக்கத்தில் அவ்வூர் இருந்ததால் அவரைச் சந்திக்க அங்கு சென்றேன். அவரிடம் உபதேசம் கேட்க பயந்து திரும்பி வந்துவிட்டேன். மீண்டும் ஒருமுறை சென்னைக்கு அவர் வந்த போதும் அவரை தர்சிக்க வாய்ப்பு வந்தது. தயங்கி தயங்கி நின்ற என்னைப் பார்த்து ஆசீர்வாதம் செய்து அக்ஷதை ப்ரசாதம் வினியோகித்தார். இப்போதும் பயம் . செவிடனான எனக்கு எவ்வாறு உபதேசம் செய்வார்? உபதேசம் செய்வாரா? (தனியாக யாருக்கும் உபதேசம் அவர் செய்வதில்லை) இப்படியே பல மாதங்கள் போயின. என் ஆவல் அதிகமானது. ஒரு நாள் திருவானைக்காவல் கோயிலுக்கு வந்திருந்தார். காலை யாரும் இல்லை. அவருடன் ஒரு சிறுவன் வந்திருந்தான். அப்போது சிறுவர்கள் ஒரு நாட்யம் ஆடிக்கொண்டு அங்கு வந்தனர். அதைப் பார்த்துக்கொண்டே அவர் கோயில் முன் கோபுரம் கிட்டச் சென்றுவிட்டார். அந்தசிறுவன் என்னருகில் நின்று நாட்யத்தை ரசித்துகொண்டிருந்தான். திடீரென்று அவருடைய குரல். அந்த சிறுவனை கூப்பிட்டது. அவருடைய குரல்தான். நாராயணனின் பத்து அவதாரங்களில் ஒன்றன் நாமம். என் செவிக்கு நன்றாகக் கேட்டது. ஆச்சர்யம். அந்த நாமமே எனக்கு உபதேசமாயிற்று.

கண்ணில் நீர் வழிய அவரைக் கும்பிட்டு நின்றேன். எனக்கு உபதேசம் செய்த நேர்த்தியை கண்டு வியந்து போனேன். அதுமுதல் அந்த நாமத்தை சொல்லிக் கொண்டு வருகிறேன். அவருடைய கட்டளையாகவே கருதுகிறேன். நினைக்க நினைக்க உவகை பொங்குகிறது. அவர் மலரடி சரணம்.

நவம்பர் இதழில் மகா பெரியவா நினைவு மஞ்சரியை எழுதியவர்

ஸ்ரீ ஸுந்தரம்

(Asst commissioner of incometax)

எனும் பெரியவா பக்தர் என்று தெரிவித்து கொள்கிறோம்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# வாழ்வின் நான்கு நிலைகள்

இராமாயணம்

உபநயனம் என்பது ஒளியாகி எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருப்பவன் பகவானின் மிகச் சிறந்த தேஜஸை தியானம் செய்கிறோம் என்பது இதன் பொருள்.

மூன்று வேதங்களின் ஸாரமாகிய இந்த காயத்ரி மந்திரத்தை முறையாக ஜபித்தாலே ஜபிப்பவர், வேதமோதியவராகக் கருதப்படுவார்.

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் கீதையில் 10வது அத்தியாயம் 35வது சுலோகத்தில் ப்ருஹத்ஸவம் ததா ஸாம்னாம் காயத்ரி சந்தஸாமஹம் என்று நல்ல சந்தஸ்களில் காயத்ரியாக இருக்கிறேன் என்று அருளியுள்ளார்.

இந்த காயத்ரியை தினமும் கட்டாயம் ஜபிக்க வேண்டும். அப்படி ஜபிக்காதவர் மனிதனாக இருக்கும் தன்மையிலிருந்து வழுவியர் ஆவார்கள்.

பிரம்மசாரி மோக்ஷம் அடையும் விருப்பம் கொண்டு சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள விதிகளை மீறாமல், அமைதியாக இந்த காயத்ரியை உபதேசிப்பதற்கு முன்பு 'பிரணவம்' உபதேசிக்கப்படுகிறது. அ, உ, ம என்ற மூன்று எழுத்துக்களும் கூடியதான ஓம் என்பதைத் தான் பிரணம் என்பது. வேதங்கள் தோன்றியதற்கும் முன்னதாகவே தோன்றியது இந்த பிரணவம். இது வேதத்தை காப்பது என்பதால் இதனை வேதம் ஓதுவதற்கும் தொடங்குவதற்கும் முன்பும், முடிப்பதற்கு பின்பும் சொல்லி முடிப்பார்கள்.

இது பகவானின் வடிவை நன்கு மனத்தில் இறுத்திக் கொள்ள உபயோகமாக இருக்கும் என்பதற்காக முன்னும், பின்பும் கூறப்படுகிறது.

காயத்ரி மந்திரம் வேதப் பொருளின் ஸாரம் என்று கருதப்படுகிறது. இது ரிக், யஜுர், ஸாம என்ற மூன்று வேதங்களின் கருத்தையும் தன்னகம் கொண்டது. இது மூன்று பாதங்களைக் கொண்டது.

நமது புத்தியில் நிலைத்து இருப்பவரும், உலகத் தோற்றத்திற்கு காரணமானவரும், ஒளி இருந்து தினமும் செய்ய வேண்டிய செயல்களை, கடமையாக கருதி செய்ய வேண்டும். இங்கனம் நடந்து கொள்பவர்களைத் தான் பிரம்மச்சாரி என்பது. தற்காலத்தில் திருமணமாகதவனை பிரம்மச்சாரி என்ற வழக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

*இத்தகைய சாத்திரப்படி நடக்கும் பிரம்மசாரிகளை நான்கு வகையாக பிரித்துள்ளனர்.*

*1. காயத்ரி பிரம்மசாரி* *2. பிராம்ம பிரம்மசாரி*

*3. ப்ராஜாபத்ய பிரம்மசாரி* *4. நைஷ்டிக பிரம்மசாரி*

*இனி இவர்களைப் பற்றி தனித்தனியாக பார்க்கலாம்.*

***1. காயத்ரி பிரம்மச்சாரி :*** *உபநயனத்திற்குப் பின் மூன்று நாள் உப்பு சேர்க்காமல் உணவு உட்கொண்டு காயத்ரியை ஜபிப்பவன்.*

***2. பிராம்ம பிரம்மச்சாரி :*** *நான்கு வேதங்களையும் குருகுல வாஸம் செய்து சுமார் 48 ஆண்டுகள் வேதம் ஓதுபவன்.*

***3. ப்ராஜாபத்ய பிரம்மசாரி :*** *திருமணமாயிருப்பினும் மனத்தாலும், பிற பெண்களை நினையாமல் தனது மனவியிடம் விரத தினங்கள், விலக்கப்பட்ட தினங்கள் ஆகியவற்றை நீக்கி மற்ற தினங்களில் மனைவியை சேர்பவன்.*

***4. நைஷ்டிக பிரம்மசாரி :*** *வேதாத்யயனம் முடிந்தும், திருமணமே செய்து கொள்ளாமல் ஆயுள்வரை நிலமாக வாழ்பவன்.*

*இங்கனம் முன்காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். தற்காலத்தில் இது முடியுமா என்ற கேள்வி எழலாம். இப்படி நியமங்கள் இருக்கின்றன என்பது தெரிந்தால் எவராவது அதனை பின்பற்ற வாய்ப்பு இருக்கிறதே.*

*பிரம்மசர்ய ஆகமத்தை நன்கு தெரிந்து கொண்டு விட் ட பிறகே கார்ஹஸ்தய கிரமம் பற்றி சொல்ல வேண்டியிருப்பதால் அதனை அடுத்த கட்டுரையில் தனியாக பார்க்கலாம்.*

*(தொடரும்)*

### கலை(ந்த) சொற்கள்

1. மகாகவி காளிதாசர்
2. பரோபகார புண்யாய
3. திருவள்ளுவ மாலை
4. ஆர்த்ரா தர்சனம்
5. வேதாந்த தேசிகர்.

# ஸ்ரீ மஹாஸ்வாமிகள் 26வது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் 26வது வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம் 23.12.2019 அன்று காஞ்சீபுரம் ஸ்ரீ சங்கர மடம் வளாகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 21.12.2019 ஆரம்பித்து மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் சதுர்வேத பாராயணம், வேதவித்வத் ஸதஸ், ஆன்மிக உபன்யாசங்கள் மற்றும் சங்கீதக் கச்சேரிகள் ஆகியவை நடத்தப்பட்டது.

ஆராதனையன்று காலை ஏகாதச ருத்ர ஜபம் மற்றும் லோக க்ஷேமத்திற்காக பல ஹோமங்கள் நடைபெற்றன. வஸோத்தாரா பூர்ணாஹுதி செய்யப்பட்டு கலச நீரால் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ப்ருந்தாவனத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டது. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் தற்போது முகாமிட்டிருக்கும் சென்னை வீனஸ் காலனி ஆஸ்திக சமாஜத்தில் தனுர்மாஸ பூஜை மற்றும் இரண்டாம் கால பூஜையை முடித்துக் கொண்டு ஆராதனை விழாவில் கலந்து கொள்வதற்காக காஞ்சிபுரம் ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினார்கள். பகல் 1.00 மணி அளவில் தீர்த்தநாராயண பூஜை நடைபெற்று மஹா தீபாராதனை நடைபெற்றது.

மாலை 6.00 மணி அளவில் ப்ரபல சங்கீத வித்வான் மாண்டலின் U. ராஜேஷ் குழுவினரின் இசையஞ்சலி நடைபெற்றது.

இரவு 7.00 மணி அளவில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தங்க ரதத்தில் ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் திருவுருவம் வைக்கப்பட்டு மங்கள வாத்யம், வேதகோஷம், வாண வேடிக்கை ஆகியவையுடன் நான்கு ராஜவீதிகளிலும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. ஸ்ரீமடத்தில் நடந்த ஆராதனை விழா நிகழ்ச்சிகளிலும் தங்க ரத ஊர்வலத்திலும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். அன்று மதியம் சுமார் 2000 பக்தர்களுக்கு அன்னப்ரஸாதம் வழங்கப்பட்டது.

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்








*சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீநகர் காலனி வடக்கு மாடவீதியில் இருக்கும் ஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாஸன் அவர்களின் க்ருஹத்தில் 17.11.2019 முதல் 15.12.2019 வரை ஸ்ரீ ஆச்சார்யாள் முகாம் நடந்தது. இந்த முகாமில் நடந்த பல நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்டவை குறிப்பிடத்தக்கவை.*

1. 24.11.2019 - ஆர். ஏ. புரம் விநாயகர் கோவிலில் சிறப்பு பூஜை மற்றும் ஸ்ரீ பெரியவாள் அனுக்ரஹபாஷணம்.

2. 27.11.19 - ஸ்வாமி ஓங்காரானந்தாவால் கட்டப்பட்டிருக்கும் ஸ்ரீ நாராயண்தாம் என்ற வளாகத்திற்குச் சென்று ஆசிரமம் முழுவதும் பார்வையிட்டு ஸ்வாமி ஓங்காரானந்தாவின் ஆன்மிக மற்றும் சமுதாயப் பணிகளை பாராட்டி கௌரவித்தார்கள். ஸ்வாமி ஓங்காரனந்தாவும் தமக்கும் ஸ்ரீமடத்திற்கும் உள்ள நீண்ட நாள் தொடர்பை நினைவுபடுத்தி ஸ்ரீமடத்தின் சமய சமுதாய பணிகளைக் குறிப்பிட்டு பாராட்டி பேசினார்கள்.

3. 28.11.2019- சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தினால் கட்டப்பட்டிருக்கும் சத்ஸங்கத்தை கோடம்பாக்கத்தில் திறந்து வைத்து தனது அனுக்ரஹ பாஷணத்தில் சத்ஸங்கத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை பற்றி எடுத்துக்கூறி இந்த பணியில் ஈடுபட்டிருக்கும் திரு. சேதுராமன் அவர்களை பாராட்டி ஆசி வழங்கினார்கள்.

4. 01.12.19 அன்று ஸ்ரீநகர் காலனி முகாமில் நடந்த நிகழ்ச்சியில் புலவர் Dr. V. ராமச்சந்திரன் அவர்கள் சௌந்தர்ய லஹரியை தமிழில் மொழிமாற்றம் செய்த தொகுப்பை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வெளியிட்டார்கள்.

5. 02.12.19 அன்று ஆதம்பாக்கம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் மற்றும் ஸ்ரீ பாண்டுரங்கன் கோவில் ஆகியவற்றிற்கு விஜயம் செய்து அங்கு குழுமியிருந்த பக்தர்களிடையே அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். வரும் வழியில் ஆதம்பாக்கம் சங்கர கேந்திரா ஸ்ரீமடம் பாடசாலைக்கு விஜயம் செய்து வித்யார்த்திகளுக்கு ஆசி வழங்கினார்கள்.

6. 03.12.19 அன்று ஸ்ரீ பெரியவாள் அவர்களுடைய நக்ஷத்ர தினம் ஸ்ரீமடம் முகாம் வளாகத்தில் கொண்டாடப்பட்டது. இதில் BJP தலைவர் திரு. எச்.ராஜா அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

7. 04.12.19, 05.12.19 மற்றும் 06.12.19 ஆகிய தினங்களில் மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் விழா கொண்டாடப்பட்டது. மூன்று தினங்களும் காலையில் கீர்த்தனங்கள் பாடப்பெற்று மாலையில் சங்கீத உபன்யாசம் நிகழ்த்தப்பட்டது.

8. 06.12.19 அன்று காஞ்சீபுரம் அருகே உள்ள வேடல் கிராமத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆன்மீக கலாச்சார மைய வளாகத்தில் நடைபெறும் ஸ்ரீமடத்தின்

கோசாலை கட்டிடம் விரிவுபடுத்தப்பட்டு புதிய வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டது. அங்கு நாட்டு மாடுகள் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகிறது. இரண்டு மாடுகள் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கோசாலை தற்போது 75க்கும் மேற்பட்ட மாடுகளுடன் விளங்குகிறது. சுமார் 4000 சதுர அடி பரப்பில் 175 மாடுகள் வரை இந்த கோசாலையில் பராமரிக்கப்படும். மேலும் இந்த கோசாலையிலிருந்து விபூதி, விரட்டி ஆகியவை தயாரிக்கும் பணியும் தொடங்கியுள்ளது.

9. 07.12.19 அன்று மைலாப்பூர் ஆர். ஆர். சபாவில் நடைபெற்ற மும்மூர்த்திகள் விழாவிற்கு எழுந்தருளி சங்கீத வித்வான்கள், பரதநாட்டிய கலைஞர்கள் உள்ளிட்டோருக்கு விருதுகள் வழங்கினார்கள்.

10. 07.12.19 அன்று ஸ்ரீநகர் காலனி வரசித்தி விநாயகர் கோவிலின் பொன்விழா நிகழ்ச்சி மற்றும் ஏகதின லக்ஷார்ச்சனை. தலைமை சீர்காழி ஸ்ரீ கண்ணப்ப சிவாச்சார்யார்.

11. 08.12.19 அன்று வக்கீல்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. 70க்கும் மேற்பட்ட ப்ரபல வழக்கறிஞர்கள் பங்கு பெற்றார்கள். வழக்கறிஞர்கள் சமுதாயத்துக்கும் சனாதன தர்மத்திற்கும் எவ்வாறு சேவை செய்யலாம் என்று விவரிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹ பாஷணம். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி சிறப்பாக செய்திருந்தார்.

12. 09.12.19 அன்று தியாக ப்ரும்ம கான சபாவில் (வாணி மஹால்) நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

13. 10.12.19 மற்றும் 11.12.19 ஆகிய தேதிகளில் ஸ்ரீநகர் காலனி வரசித்தி விநாயகர் கோவிலில் சர்வசாதகம் பூந்தமல்லி ஸ்ரீ கணேச சிவாச்சாரியார் தலைமையில் சண்டி ஹோமம் நடைபெற்றது.

14. 12.12.19 அன்று சைதாப்பேட்டை பொன்னியம்மன் கோவிலுக்கு விஜயம் செய்தார்கள்.

15. 15.12.19 அன்று மேற்கு சைதாப்பேட்டை பார்ஸன் நகரில் அமைந்துள்ள வரஸித்தி விநாயகர் ஆலயத்திற்கு சென்ற ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அங்கு புதிதாக ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ மஹாபெரியவாள் சிலா விக்ரஹத்தை திறந்து வைத்து ஆசி வழங்கினார்.

இது தவிர நான்கு செவ்வாய் கிழமைகளில் மதியம் 2.30 முதல் மாலை 5.30 வரை திருப்புகழ் அன்பர்கள் திருப்புகழ் பாராயணம் செய்தனர். Dr. கணேஷ் குழுவினரின் நாம ஸங்கீர்த்தனம், ஸ்ரீநகர் காலனி மகளிர் குழுவினரின் நாராயணீயம் பாராயணம் நடைபெற்றது.

15.12.2019 அன்று மாலை மூன்று கால பூஜைகளையும் முடித்துக் கொண்டு சென்னை ஆழ்வார்பேட்டை ஆஸ்திக ஸமாஜத்திற்கு எழுந்தருளினார்கள். ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகே ஆஸ்திக ஸமாஜத்தின் தலைவர் திரு. சீதாராமன் மற்றும் திரளான பக்தர்கள் ஸ்ரீ ஆசார்யாளை பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்றார்கள். முகாம் ஆஸ்திக சமாஜத்தில் ஜனவரி மாதம் 20ம் தேதி வரை தொடரும்.

17.12.2019 முதல் தனுர்மாஸ பூஜை ஆஸ்திக ஸமாஜம் ஸ்ரீமடம் முகாமில் நடைபெறுகிறது. ப்ரதி தினமும் காலை 4.00 மணி அளவில் ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜை செய்கிறார்கள். பிறகு தொடர்ந்து இரண்டாம் கால பூஜை பகல் 11.00 மணி அளவில் நடைபெறுகிறது.

23.12.2019 அன்று ஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆராதனை. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தற்போது முகாமிட்டிருக்கும் சென்னை வீனஸ்காலனி ஆஸ்திக சமாஜத்தில் தனுர்மாஸ பூஜை மற்றும் இரண்டாம் கால பூஜையை முடித்துக் கொண்டு ஆராதனை விழாவில் கலந்து கொள்வதற்காக காஞ்சிபுரம் ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஆராதனை விழா முடிந்தவுடன் பக்தர்களுக்கு அக்ஷதை ப்ரஸாதம் வழங்கி அன்று மாலை ப்ரதோஷ பூஜை நடத்துவதற்காக ஸ்ரீமடம் முகாமிற்கு திரும்பினார்கள். ப்ரதோஷ பூஜைக்குப் பிறகு சனாதன தர்மம் மற்றும் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் பற்றி ஒரு சிறப்பான அனுக்ரஹ பாஷணம் செய்தார்கள்.

26.12.2019 வியாழக்கிழமை ஸ்ரீமடம் முகாமில் ஸூர்ய க்ருஹணம் ச்ரத்தையுடன் அனுஷ்டிக்கப்பட்டது. க்ரஹண நேரத்தில் (காலை 8.00 மணி முதல் 11.20 வரை) சுமார் 100 பக்தர்கள் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர சன்னதியில் அவரவர்களுக்குண்டான ஜபங்களை செய்தனர். பஞ்சதானம், தச தானம் முதலியன தகுந்த நபர்களுக்கு தாராளமாக வழங்கப்பட்டது.

(தொடரும்)

# ஸ்ரீ காஞ்சி காமகோடி கலாச்சார மையம் - புதுதில்லி

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்களின் அபிப்ராயம் மற்றும் வழிகாட்டுதல்படியும் நம் நாட்டின் தலைநகரமான புதுதில்லி ஆர்.கே.புரம் செக்டார் 1 ஐயப்ப மந்திர் மார்க் என்ற இடத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் கல்ச்சுரல் சென்டர் என்ற ஒரு வளாகம் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் க்ருஹப்ரவேசம் டிசம்பர் மாதம் 1ம் தேதி ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று காலை மங்கள வாத்யத்துடன் தொடங்கி, கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், வாஸ்து ஹோமம் ஆகியவைகள் நடைபெற்றது.

கலசத்திலிருந்து புனித நீரால் கோபுரத்திற்கு கலசாபிஷேகம் செய்யப்பட்டது. பிறகு சண்டி பாராயணம் மற்றும் ஹோமம், திருப்புகழ் பஜனை முதலியன நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீநகர் காலனி முகாமிலிருந்து காணொளிக் காட்சி (VIDEO CONFERENCING) மூலம் அனுக்ரஹ பாஷனம் அருளினார்கள். ஸ்ரீ ஆதிசங்கரரால் உபாசனை செய்யப்பட்டு ப்ரபலப்படுத்தப்பட்ட ஷண்மத ஸ்தாபனம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். எப்படி எல்லா நகரங்களிலும் TRADE CENTRE அமைக்கப்பட்டு இருக்கிறதோ அப்படியே CULTURAL CENTRES கூட அமைக்கப் பட வேண்டும் என்று தெரிவித்தார்கள். மத்திய அமைச்சர் SRI FAGGAN SINGH KULASTE, ஸ்ரீ முரளி மனோகர் ஜோஷி, ஸ்ரீ ஜஸ்டிஸ் ராமமூர்த்தி, மலைமந்திர் ஸ்ரீ பட்டாபிராமன், டெல்லி காமாக்ஷி மந்திர் ஸ்ரீ பொள்ளாச்சி கணேசன் மற்றும் பல ப்ரமுகர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

ஹோமம் மற்றும் வேதபாராயணங்கள் திருவண்ணாமலை போளூர் ஸ்ரீமடம் வேதபாடசாலை அத்யாபகர் ஸ்ரீ மஹாபளேச்வர் பட் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமடம் சில்ப பாடசாலையில் படித்துத் தேறிய ஸ்ரீ நந்தகுமார் ஸ்தபதி அவர்களால் இந்த கல்ச்சுரல் சென்டரின் கோபுரம், சிலைகள் மற்றும் சுதை வேலைகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. M/S. SHAPOORJI PALLONJI என்ற நிறுவனம் இக்கட்டிடத்தின் ஆரம்பம் முதல் நிறைவு வரை (PLANNING TO COMPLETION) இந்த பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## காமம் படுத்தும் பாடு

இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய அரசன் மாந்தாதா. சீரும் சிறப்புமாக அரசாட்சி செய்து வந்தான். அவனுக்கு சசிபிந்துவின் மகளான இந்துமதி மனைவியானாள். அவள் மூலம் பல பெண்களையும் பிள்ளைகளையும் பெற்று குடும்பம் நடத்தி வந்தான். அந்நாட்டிலேயே சௌபரி எனும் மகாதபஸ்வி வாழ்ந்து வந்தார்.

ஓதி உணர்ந்தவர், தவ வாழ்க்கையை மேற்கொண்டவர். ஒரு நாள் ஆற்றின் கரையில் அமர்ந்திருந்த போது அங்கு வசிக்கும் ஸுமந்தன் எனும் பெரிய மீன் தன் குட்டிகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அவருடைய மனதில் விபரீத எண்ணம் உருவாயிற்று. இதுபோல் நாம் ஏன் மணம் முடித்து பேரப் பிள்ளைகளுடன் விளையாடக்கூடாது? அவருக்கு யார் பெண் கொடுப்பார்? யோசித்தார். மாந்தாதா நினைவுக்கு வந்தார். நேரே அவனைக் காணச் சென்று தன் விருப்பத்தைச் சொன்னார். அதிர்ந்து போனார் அரசன். இளம்பெண்ணை இவருக்கு மணம் முடிப்பதா? மறுத்தால் சாபத்தை ஏற்பதா? குழம்பிப் போனார் அரசன். இதற்கு ஒரு யுக்தி செய்தார். என் பெண்கள் எவரை விரும்புகிறாரோ அவரையே மணம் முடிக்கவைக்க ஸம்மதிப்பேன். என்று கூற அவருடைய உள்ளத்தை தெரிந்துகொண்ட தபஸ்வி அப்படியானால் சரி நானே உம்முடைய பெண்களைக் கேட்கிறேன் என்றார்.

தப்பிக்க முடியாது என்று தெரிந்தும் ராஜா தன் பெண்களிடம் அவரை அழைத்துச் சென்றார். தபஸ்வியும் தன்னை ஸுந்தரபுருஷனாக முதல் பெண்ணிடம் தன்னைக் காட்டினார். அவருடைய அழகில் மயங்கிய அவளும் விவாகத்திற்கு சம்மதித்தாள். இரண்டாவது, மூன்றாவது இப்படி எல்லா பெண்களும் அவரையே மணம் முடிக்க விருப்பம் தெரிவிக்க மாந்தாதா திகைத்துப்போய் வேறு வழியில்லாமல் அனைத்துப் பெண்களையும் அவருக்கு மணம் முடித்தார். அவரும் அனைத்துப் பெண்களையும் தன் ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்றார். அனைத்துப் பெண்களிடமும் தனித்தனியாக ஆனந்தமாக வாழ்க்கை நடத்தினார். இப்படி ஒரு வயோதிகனுக்கு தன் பெண்களை மணம் முடித்துவிட்டோமே என்று மனம் வருந்திய அரசன் அவருடைய ஆஸ்ரமத்துக்குத் திடீர் விஜயம் செய்தான். முதல் பெண்ணிடம் விசாரித்தான். மிக்க

மகிழ்ச்சியுடன் இருப்பதாக அவள் சொல்ல இரண்டாம் பெண்ணும் அதையே சொல்ல எல்லா பெண்களும் மன நிறைவுடனிருப்பதைக் கண்ட அரசன் மாந்தாதா மகிழ்ச்சியுடன் நாடு திரும்பினான். நாட்கள், மாதங்கள், வருடங்கள் பல கழிந்தன. சௌபரிக்கும் பல பிள்ளைகள், பெண்கள், பேரன்கள், பேத்திகள் என்று வம்சம் ஆலமரம் போல் தழைத்தது. ஆனந்தத்தில் மூழ்கிய அவர் ஸுமந்த் மீனை நினைத்துக் கொண்டு நானும் அதுபோல் பல புத்ர புத்ரிகளையுடையவனாகிவிட்டேன். என்னே என் பேறு என்று உவகைக்கொண்டார்.

இப்படி அவர் இருக்கையில் திடீரென்று அவருக்கு ''சீ என்ன கார்யம் செய்தேன்? காமத்துக்காக அல்லவா இத்தனை பெண்களை மணம் புரிந்தேன். த்ருப்தி ஏற்பட்டதா? இல்லை. எத்தனையோ வருடங்கள் நான் செய்த தவம் முற்றிலும் வீணாகிவிட்டதே. நெய் இட இட நெருப்பு கொழுந்துவிட்டு எரிவது போல் காமம் அடங்காது. கடலினும் பெரிது அது. மாபெறும் தவறல்லவா செய்துவிட்டேன்'' என்று புலம்பி அப்போதே அனைவரையும் துறந்து மீண்டும் தவம் செய்ய முனைந்தார்.

(விஷ்ணு புராணம்)


॥ ஸ்ரீ: ॥

இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.

பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை

Typing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி

எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.

க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்

எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.

(Transliteration in all Languages done here.)

Grantham to Devanagiri, Grantham to Tamil,

மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்

உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்

அச்சிட்டு தரப்படும்.

Contact : V.K.N. Enterprises (Printer)

Mylapore, Chennai - 600 004 Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# மஹிஷாஸுரமர்தினி ஸ்தோத்ரம்

अयिगिरि नन्दिनि नन्दित मेधिनि विश्व विनोदिनि नन्दनुते
गिरिवर विन्ध्य शिरिदि निवासिनि विश्णुविलासिनि जिष्णुनुते
भगवति हेसिति कण्डकुटिम्बिनि भूरिकुटिम्बिनि भूरिकुते
जय जय हे महिषासुर मर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। १।।

**அயிகிரி நந்தினி நந்தித மேதினி**
**விஸ்வவினோதினி நந்தநுதே**
**கிரிவர விந்த்ய சிரோதி நிவாஸினி**
**விஷ்ணுவிலாஸினி ஜிஷ்ணு நுதே**
**பகவதி ஹேஸிதி கண்டகுடும்பினி**
**பூரிகுடும்பினி பூரிக்ருதே**
**ஜயஜய ஹே மஹிஷாஸுர மர்தினி**
**ரம்ய கபர்தினி சைலஸுதே 1**

*மலையரசனின் மகளே உலகை மகிழ்விப்பவளே, லீலையாக உலகை நடத்துபவளே நந்தனால் வழிபட்டவளே, சிறந்த மலையான விந்த்யமலையில் இருப்பவளே, திருமாலுக்கு பெருமை சேர்ப்பவளே, வெற்றி வீரர்களால் துதிக்கப்படுபவளே, பகவதி நீலகண்டரின் பத்னியே விஸ்வத்தை பெரிய குடும்பமாக் கொண்டவளே, அரியவற்றைச் சாதிப்பவளே மஹிஷாஸுரனை மாய்த்தவளே, அழகிய பின்னிய கூந்தலை உடையவளே மலைமகளே ஜய ஜய என்று உன்னைப் போற்றுகிறேன். 1*

सुरवरवर्षिण दुर्ध्रर दर्षिणि दुर्मुख मर्षिणि हर्षरते
त्रिभुवन फ्षिणि शन्करतोषिणि किल्भिष मोषिणि घोषरते ।
तनुज निरोषिणि दितिसुत रोषिणि दुर्मत शोषिणि सिन्धुसुते
जय जय हे महिषासुर मर्दिनि रम्यकपर्दिनि शैलसुते ।। २।।

**ஸுரவர வர்ஷிணி துர்தர தர்ஷிணி**
**துர்முகமர்ஷிணி ஹர்ஷரதே**
**த்ரிபுவன போஷிணி சங்கரதோஷிணி**
**கில்பிஷ மோஷிணி கோஷரதே**
**துனுஜ நிரோஷிணி திதிஸுத ரோஷிணி**
**துர்மத சோஷிணி ஸிந்துஸுதே**
**ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி**
**ரம்ய கபர்தினி சைலஸுதே 2**

நல்லோருக்கு வரன்களை மழைபோல் பொழிபவளே, கொடியவர்களை அடக்குபவளே, கடுமையான வார்த்தைகளையும் பொறுப்பவளே, மகிழ்வுடன் பொலிபவளே, மூன்று உலகத்துக்கும் உணவளித்துக் காப்பவளே, சிவனை மகிழ்விப்பவளே, பாவங்களை போக்குபவளே, கோஷிப்பவளே, தைத்யர்களிடம் கோபம் கொள்பவளே, துர்மதங்களை உலர்த்துபவளே பின்னிய கூந்தலை உடையவளே, மஹிஷாஸுரனை மாய்த்தவளே உன்னை ஜய ஜய என்று போற்றுகிறேன்.

ஸனாதன தர்மப்புதிர்கள்
டிஸம்பர் விடைகள்

1. ஹஸ்தாமலகீயம்
2. கால ஸம்ஹார, கஜ ஸம்ஹார மூர்திகள்
3. மெய்பொருள் நாயனார்
4. த்யாவாப்ருத்வீ
5. இலையின் பின்புறத்தில்
6. சாகம்பரீ
7. ருஸ்யஸ்ருங்கர்
8. திருவள்ளுவமாலை
9. கம்பர்
10. கோக்ராஸம்

ஸனாதன தமப்புதிர்கள்
**ஜனவரி வினாக்கள்**

1. கபில நாயனார் பேறு பெற்ற தலம்
2. காலவ ரிஷியின் 360 பெண்களை 360 நாட்கள் மணந்த இடம்
3. அஜபக்ஷித பாஷ்யம் எது?
4. இந்த 7 மந்த்ரத்தை பாராயணம் செய்தால் தேவீமகாத்ம்யம் பாராயணம் செய்த பலன் கிடைக்கும்
5. கீழுள்ள லோகங்கள் எத்தனை?
6. திபெத்தில் இத்பத்தியாகும் நம் நாட்டு நதி
7. காவிரி தந்த துறைமுகப் பட்டினம்
8. எல்லாருக்கும் அன்னத்தை அளித்தல் இப்படிக்கூறப்படும்
9. திரு சித்ரகூடம் எங்குள்ளது?
10. காஞ்சி வரதரை துதித்த அத்வைத கோமான்.

## மகாகவி

# காளிதாஸரின் ப்ரம்மா துதி

**இளம்பூரணர்**

*உலக காவ்ய உலகில் காளிதாசரை அறியாதவர் இருக்க முடியாது. ''உவமைக்குக் காளிதாஸர்'' எனும் பெருமை இவருக்கு உண்டு. தன் சொல் வன்மையாலும், உவமையாலும், இவர் தொட்டதெல்லாம் துலங்கியது. இவர் வழங்கிய காவ்யங்களும், நாடகங்களும் படிப்போர் மனதைக் கவர்கின்றன. நாம் இப்போது பார்க்கப் போவது அவருடைய ப்ரம்மா துதி. இது குமார ஸம்பவத்தில் இரண்டாம் ஸர்கத்தில் அமைந்துள்ளது.தேவர்கள் தரகாசுரனால் துன்புறுத்தப்பட்டு அவனை அழிக்க ப்ரம்மாவை வேண்டுகின்றனர் மொத்தம் 12 ஸ்லோகங்கள் கொண்டது இந்த துதி. கவியின் ஆழ்ந்த புலமையும், அவரது தத்வஞ்யான அறிவும் பளிச்சிடுகிறது.*

*இதை பார்ப்போம்.*

**नमस्त्रिमूतये तुभ्यम् प्राक्स्त्रुष्टे: केवलमात्मने**

**गुणत्रय विभागाय पश्रात् भेदमुपेयुषे ।। १**

***நமஸ்த்ரிமூர்த்தயே துப்யம் ப்ராக்ஸ்ருஷ்டே; கேவலமாத்மனே***
***குணத்ரய விபாகாய பச்சாத் பேதமுபேயுஷே***

*பகவானே படைப்பிற்கு முன் கேவல ஆத்மாவாக இருப்பவரும் பின்பு சத்வ ரஜஸ் தமஸ் என்று பாகுபாடு உடையவரும் வேறுபாட்டை அடைந்தவரும் மும்மூர்த்தி வடிவருமான உமக்கு நமஸ்காரம்.*

**यदमोघम्पामन्तरुप्तम् बीजमज त्वया**

**ततश्रराचरम् विश्वम् प्रभवस्तश्य गीयसे ।। २**

***யதமோகம் அபாமந்தருப்தம் பீஜம் அஜ த்வ்யா***
***ததச்சராசரம் விஸ்வம் ப்ரபவஸ்தஸ்ய கீயசே***

*பிறக்காதவரே நீரில் உம்மால் திண்ணமாய் பயனளிக்கும் எந்த வித்து இடப்பட்டதோ அதிலிருந்து சரசராங்கள் அடங்கிய இவ்வுலகு தோன்றியது. இதற்கு காரணகர்த்தா என்று புகழப்படுகிறீர்கள்.*

**तिस्रुभिस्त्वम् अवस्ताभिर्म हिमानम् उदीरयन्**

**प्रलयस्थिति सर्गाणामेक: कारणताम् गत: ।। ३**

***திஸ்ருபிஸ்த்வம் அவஸ்தாபிர்மஹிமானம் உதீரயன்***

***ப்ரலயஸ்திதி ஸர்காணாமேக: காரணதாம் கத:***

*படைப்பிற்கு முன் ஒருவராக இருந்த நீர் முக்குணங்களால் உண்டான நிலைகளால் உமது சக்தியை புலப்படுத்துகின்றவராக ஸ்ருஷ்டி, ஸ்திதி ப்ரளயங்களுக்குக் காரணாமாக ஆனீர்.*

**स्त्रीपुम्सावात्मभागौ ते भिन्नमूर्ते: सिसृक्षया**

**प्रसूतिभाज: सर्गस्य तावेव पितरौ स्म्रुतौ ।। ४**

***ஸ்த்ரீபும்ஸாவாத்மபாகௌ தே பின்னமூர்த்தே: ஸிஸ்ருக்ஷயா***

***ப்ரஸூதிபாஜ: ஸர்கஸ்ய தாவேவ பித்ரௌ ஸ்ம்ருதௌ***

*பெண்ணையும் ஆணையும் படைக்கும் விருப்பத்தினால் இரு கூறுகளாகச் செய்யப்பட்ட உடலுடைய உமது எந்த சரீரபகுதிகள் இருந்தனவோ அவைகளே மேன்மேலும் உத்பத்தி செய்கிற இவ்வுலகின் தாய் தந்தையராகக் கருதப்ப்டுகின்றன.*

**स्वकालपरिमाणेन व्यस्तरात्रिम्दिवस्यते**

**यौ तु स्वप्नाअवबोधौ तौ भूतानाम् प्रलयोदयौ ।। ५**

***ஸ்வகாலபரிமாணேன வ்யஸ்தராத்ரிம்திவஸ்ய ச***

***யௌ து ஸ்வப்னாஅவபோதௌ தௌ பூதானாம் ப்ரலயோதயௌ***

*தமக்கே உரிய கால அளவைக் கொண்டு பகலையும் இரவையும் வகுத்துக்கொண்ட உமக்கு தூக்கம் விழிப்பு எனும் காலபாகுபாடுகள் உள்ளனவோ இவ்விரண்டுமே ஜீவராசிகளின் ப்ரளயம், தோற்றம் என்று உள்ளன.*

# ஸ்ரீ சாங்கர போத ரத்னாவளி

*108 அத்வைத வாசகங்கள்*

*பி. ஆர் கண்ணன், மும்பை*

*திருவிடைமருதூர் கோவிலில் ஸத்யம் அத்வைதம் என்று சொன்ன இடத்தில் 1963 ஆம் வருடம் மகா பெரியவா டிசம்பர் மாதம் ஸ்ரீசங்கரரின் 108 அத்வைத வாக்யங்களை கல்வெட்டில் பொறித்து நிர்மாணம் செய்தருளினார். அவ்வாசகங்களை ஸ்ரீ பி. ஆர் கண்ணன் அவர்கள் ஸம்ஸ்க்ருதஸ்ரீ பத்ரிகையில் வெளியிட்டிருந்தார்கள். அதை ப்ரதீப வாசகர்களுக்கு அளிக்கிறோம். கட்டுரை ஆசிரியருக்கும் பத்ரிகை ஆசிரியருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.*

सर्वदा समैकरसम् अद्वैदम् अभयम् आत्मतत्वम् ब्रह्मैव स्म:

**ஸர்வதா ஸமைகரஸமத்வைதம் அபயம் ஆத்மதத்வம் ப்ருஹ்மைவ**

*ஸ்ம: (ப்ருஹதாரண்ய பாஷ்யம் 4.4.6) 1*

सर्वात्मैक भावम् अद्वैदमापन्न: सन्त; ब्रह्मैव भवन्ति

*ஒரே ரஸமாயும்,ஆத்மதத்வமாயும் அச்சமின்றியும் நாங்கள் ப்ரம்மமாகவே இருக்கிறோம்.*

**ஸர்வாத்மைக பாவம் அத்வைதமாபன்ன: ஸந்த: ப்ரம்மைவ பவந்தி.**

*(கேனோபநிஷத் பாஷ்யம் 2.5) 2*

*ஸத்புருஷர்கள் அத்வைத பாவத்தை அடைந்தவர்கள் எல்லா*

*ப்ராணிகளிடமும் தன்னைக் கண்டு ப்ரம்மமாகவே இருக்கிறார்கள்.*

नित्यमद्वैतमात्मानम् विजानाति तदा क: किम् कुतो वा गोपायितुम् इच्चेत् ।

**நித்யமத்வைதம் ஆத்மானம் விஜானாதி ததா க: கிம் குதோ வா**

**கோபயிதும் இச்சேத்.** *(கடபாஷ்யம் 2.1.5) 3*

*எவன் ஒருவன் தன்னை அத்வைதமாகத் தெரிந்து கொண்டவன்*

*யாரை யாரிடமிருந்து காப்பான்?*

अस्माकम् अद्वैत द्रिष्टि: अभ्रान्तानाम् ।।

**அஸ்மாகம் அத்வைத த்ருஷ்டி: அப்ராந்தானாம்**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம் 5)*

*மாயைலிருந்து விடுபட்ட எங்கள் பார்வை அத்வைதமே.*

अद्वैतम् च उत्पत्ति प्रलयवश्रेति विप्रषि

**அத்வைதம் ச உத்பத்தி ப்ரலயவத் ச இதி விப்ரக்ஷித்தம்**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம் 5*

*உத்பத்தியையோ ப்ரளயத்தையோ அத்வைதம் ஒப்புக்கொள்ளாது.*

अद्वयता अभया हि अत: सैव शिवा

**அத்வயதா அபயா ஹி அத: ஸைவ சிவா 6**

*(மாண்டூக்ய காரிகா பாஷ்யம்)*

*பயமின்மையும் எப்போதும் சிவமாயுமுள்ளது அத்வைதம்.*

स्ज्जुवत् मायाविवच्च अद्वैतम् परमार्तत: (माण्दूक्यकारिका भाष्यम्)

*அனைவரையும் மயக்கும் மாயாவிக் கயிறு போன்றது அத்வைதம்.*

प्रबोदे परमार्त तत्वे द्वैतम् न विद्यते (माण्दूक्यकारिका भाष्यम् आ १८)

*பரமார்த்த தத்வம் தெரிந்தவுடன் த்வைதம் இருப்பதில்லை.*

अद्वये शिवे शान्ते सर्व एकी भवन्ति । 9 मुण्टक भाष्यम् 3-2-7

*சிவமாயும் சாந்தமாயுள்ள அத்வைதத்தில் எல்லாம் ஏகமாகின்றன.*

अद्वयलक्षणम् परमम् साम्यमुपैति (मुण्टक भाषयम्) 3-1-3

**அத்வய லக்ஷணம் பரமம் ஸாம்யமுபைதி** *(முண்டக பாஷ்யம்)*

*பரம ஸாம்யமே அத்வயலக்ஷணம்.*

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த் யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

**ஏதேஷு கோசேஷு மத்யே விஞ்யானமயோ ஞ்யானசக்திமான் கர்த்ருரூப: ந மனோமய இச்சாசக்திமான் கரண்ரூப: ந ப்ராண மய: க்ரியாசக்திமான் கார்யரூப: யோக்யத்வாதேவ ஏதேஷாம் விபாக இதி வர்ணயந்திந ஏதத் கோசத்ரயம் மிலிதம் ஸூக்ஷ்ம சரீரம் இதி உச்யதே ॥ 89**

*இந்த கோசங்களில் விஞ்யானமயகோசம் அறிவுடன் இருப்பதால் கர்தா எனவும், மணோமயகோசம் ஸங்கல்பத்துடன் இருப்பதால் காரணரூபன் எனவும், ப்ராணமயகோசம் க்ரியையுடன் இருப்பதால் கார்யரூபன் எனவும் அழைக்கப்படும். இந்த பிரிவு அவைகள் செய்யும் வேலையைப் பொறுத்தது. இந்த மூன்றுகோசங்களும் சேர்த்து ஸூக்ஷ்மசரீரம் எனப்படும்.*

**அத்ராபி அகிலஸூக்ஷ்மசரீரம் ஏகபுத்தி விஷயதயா வனவஜ் ஜலாசயத்வா ஸமஷ்டிரனேக புத்திவிஷ்யதயா வ்ர்க்ஷவத் ஜலவத் வா வ்யஷ்டிரபி பவதி । 90**

*எல்லா ஸூக்ஷ்மசரீரங்களும் ஸேர்த்து சமஷ்டி எனவும் (வனம், ஏரி) போன்று கூறுவர். தனிதனியாக (மரம், நீர்த் துளி) வ்யஷ்டி என்று கூறுவர்.*

**ஏதத் ஸமஷ்டி உபஹிதம் சைதன்யம் ஸூத்ராத்மா ஹிரண்ய கர்ப: ப்ராண: ச இதி உச்யதேந ஸர்வத்ர அனுஸ்யூதத்வாத் ஞ்யான இச்சா க்ரியாசக்திமத் உபஹித்த்வாத் ச ॥ 91**

*இந்த ஸமஷ்டியாக உள்ள சைதன்யம் ஸூத்ராத்மா ஹிரண்ய கர்பன், ப்ராணன் என அழைக்கப்படும். ஞ்யான இச்சா க்ரியயை களுடன் எங்கும் பரவியுள்ளது, அபஞ்சீகரணம் ஆகாத பஞ்ச பூதங்களுடன் தன்னை வெளிப்படுத்திகொள்கிறது.*

**அஸ்யைஷா ஸமஷ்டி: ஸ்தூலப்ரபஞ்ச அபேக்ஷயா ஸூக்ஷ்மத்**
**வாத் ஸூக்ஷ்மசரீரம் விஞ்யானமயாதி கோசத்ரயம் ஜாக்ரத்**
**வாஸனமயத்வாத் ஸ்வப்னோஅத ஏவ ஸ்தூலப்ரபஞ்ச**
**லயஸ்தானமிதி சோச்யதே ॥ 92**

*ஹிரண்யகர்பனின் இந்த மூன்று கோசங்களும் ஸூக்ஷ்மத்தினால் ஸூக்ஷ்ம சரீரம் என்பர். பரு உடலைவிட நுண்ணியதாக இருப்பதால், இதுவே கனவு நிலை.விழிப்பு நிலையிலுள்ள படிமங்கள் இதில் உள்ளன. மேலும் பரு உலகம் இங்குதான் சந்திக்கிறது.*

**ஏதத் வ்யஷ்டி உபஹிதம் சைதன்யம் தைஜஸோ பவதி**
**தேஜோமயந்தகரண உபஹித்த்வாத் ॥ 93**

*வ்யஷ்டியாக உள்ள ஸூக்ஷ்ம சரீரம் தைஜஸன் எனப்படும். எப்போதும்*
*ஒளிர்வதால் தைஜஸன் எனப்பட்டது.*

**அஸ்யாபி இயம் வ்யஷ்டி: ஸ்தூலசரீர அபேக்ஷயா ஸூக்ஷ்மத்**
**வாத் இதி ஹேதோரேவ ஸூக்ஷ்மசரீரம் விஞ்யானமயாதி**
**கோசத்ரயம் ஜாக்ரத்வாஸனாமயத்வாத் ஸ்வப்னோத:**
**ஏவ ஸ்தூலசரீரலயஸ்தானமிதி சோச்யதே ॥ 94**

*வ்யஷ்டியாக உள்ள தைஜஸனும் மூன்றுகோசங்கள் உடையவனாய் ஸூக்ஷ்மசரீரம் என பெயர் பெறுகிறான். பரு உடலைவிட நுண்ணியதாய் உள்ளதால் இப் பெயர். இதுவே கனவு நிலை எனப்படும். இங்கே விழிப்பு நிலையில் உள்ள விஷயங்கள் உணரப்படும். அதனாலேயே பரு உடல் இங்கு வந்து ஸந்திக்குமிடமென்பர்.*

**ஏதௌ ஸூத்ராதம தைஜஸௌ ததானீம் மனோவ்ருத்திபி: ஸூக்ஷ்ம**
**விஷயானுபவத: ''ப்ரவிவிக்த புக்த தைஜஸ:'' இத்யாதி ஸ்ருதே:**

*மனதின் நுண்ணிய செயலால் ஸூத்ராத்மனும் தைஜஸனும் நுண்பொருள்களை அனுபவிப்பர். தைஜஸன் நுண்பொருள்களை அனுபவிக்கிறான்'' என்று ஸ்ருதி கூறும்.*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

***ஆஹூதா த்ருத்ராஷ்ட் ரேண ராஞ்யா சாந்த நவேன ச ।।***

*கேசவருடன் சிறிது நேரம் ஓய்வெடுத்தபின் அவர்கள் அரசனால் அழைக்கப்பட்டனர்.*



***த்ருத்ராஷ் ட்ர: ப்ராத்ருபிஸ்ஸஹ கௌந்தேய நிபோதேதம் வசோ மம ।।***
***பாண்டுனா வர்திதம் ராஜ்யம் பாலிதம் சாஸனாத் மம ।।***

*தர்மனே இந்த என் பேச்சைக்கேள் ''இந்த ராஜ்யம் பாண்டுவினால் வளர்க்கப்பட்டு காக்கப்பட்டது''*

***அர்தராஜ்யம் து ஸம்ப்ராப்ய காண்டவப்ரஸ்தம் ஆவிச***
***கேசவோ யதி மன்யேத த்த் கர்தவ்யம் அசம்ஸயம் ।।***

*பாதி ராஜ்யத்தை ஏற்றுக் கொள். காண்டவ ப்ரஸ்தம் செல். இதை கேசவர் அங்கீகரித்தால் சந்தேகமில்லாமல் செய்யவேண்டும்.*

***அபிஷேகஸ்து ஸம்பாரான் க்ஷத்தாரானய மா சிரம்***
***அபிஷித்தம் கரிஷ்யாமி ஹி ஆத்ய வை குரு நன்தனம் ।।***

*விதுரனே யௌவராஜ்ய அபிஷேகத்திற்கு வேண்டிய ஸாமக்ரீக்களை ஏற்பாடு செய். தர்மரை குரு நந்தனை அபிஷேகம் செய்யப்பட்டவனாகப் பார்ப்பேன்.*

***ப்ராம்மணா நைககமஸ்ரேஷ்டா: ஸ்ரோணீமுக்யாச்ச ஸர்வச:***
***ஆஹூயந்தாம் ப்ரக்ருதயோ பாந்தவாஸ்ச்ச விசேஷத: ।।***

*அந்தணர்களையும், வைஸ்ய ப்ரமுகர்களையும், பந்துக்களையும் மற்ற ஜனங்களையும் அழையுங்கள்''*

***அபிஷேக உதக க்லின்னம் ஸ்வேத சத்ரேண சோபிதம்***
***த்ருஷ்ட்வா குந்தீஸுதம் ஜ்யேஷ்டம் ப்ரசம்ஸந்து பரே ஜனா: ।।***

அபிஷேகத்தால் நனைந்தவரும், வெண்குடையினால் அலங்கரிக்கப்பட்டவருமான குந்திபுத்ரனை பெரியவனை மக்கள் பாராட்டினர்.

***பீஷ்மோ த்ரோணோ க்ருப: க்ஷத்தா ஸாது ஸாது இத்யப்ருவன் ।***

க நன்று நன்று என பீஷ்மரும் த்ரோணரும் க்ருபரும் கூறினர்.

***தஸ்மின் க்ஷணே [ராஜன்] க்ருஷ்ணத்வைபாயனஸ்ததா***
***காரயாமாஸ விதிவத் கேசாவானுமதே ததா ।***
***மூர்தாபிஷிக்தம் கௌந்தேயம் த்ருதராஷ் ட்ரே அப்ரவீதிதம் ।।***

அச்சமயத்தில் வ்யாஸமுனிவர் அங்கு வந்து தர்மருக்கு கண்ணனின் அனுமதியுடன் மூர்தாபிஷேகம் செய்ய அரசன் இவ்வாறு கூறினான்.

***ஸமக்ஷம் வாஸுதேவஸ்ய குரூணாம் ச ஸமக்ஷத:***
***அபிஷேகஸ்த்வயா ப்ராப்தோதுஷ்ப்ராபோ ஹி அக்ருதாத்மபி: ।।***

தன்னை அறிந்தவர்களைத் தவிர யாருக்கும் இந்த யௌவராஜ்யம் க்ருஷ்ணன் மூலமாகவும் கௌவரவர் மத்தியிலும் கிடைப்பது அரிது.

***கச்ச த்வம் காண்டவப்ரஸ்தம் புரம் ராஷ் ட்ரம் ச வர்தய***

எனவே நீ காண்டவப்ரஸ்தம் செல் அந்நாட்டை வளர்.

***ப்ரதிக்ருஹ்ய தத்வாக்யம் தஸ்மை சர்வே ப்ரணம்ய ச***
***ப்ரதஸ்திரே ததோ கோஷ ஸம்யுக்தைர்ஸ்யந்தனைர் வரை: ।।***

அப்படியே ஆகுக என்று கூறி பாண்டவர்கள் ரதங்கள் கோஷிக்க அங்கிருந்து கிளம்பினர்.

***வாசுதேவோ ஜகன்னாத சிந்தயாமாஸ வாஸவம்***
***மஹேந்த்ர சாஸனாத்கத்வா விஸ்வகர்மா து கேசவம்***
***ப்ரணம்ய ப்ரணிபதார்ஹம் கிம் கரோமி இத்யபாஷத ।।***

ஜகன்னாதனான க்ருஷ்ணன் இந்த்ரனை நினைக்க அவன் விஸ்வகர்மாவை நினைக்க வணங்கத்தகுந்தவனான க்ருஷ்ணனை வணங்கி நான் என்ன செய்ய வேண்டும் என்றான்.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயதேவரும் அவர் அருளிச் செய்த கீத கோவிந்தமும்

## பாகம்-2

21. இருப்பினும் ஸ்ரீ ஜயதேவர் ஸ்ரீ ஜகன்நாதரின் ஸந்நிதியில் பாடுவதையும், ஆடுவதையும் நிறுத்தவில்லை. ராஜா மிகவும் கோபம் கொண்டு ஸ்ரீ ஜயதேவரிடம், எந்த வகையில் கீதகோவிந்தம் தன் கவிதையைவிட உயர்ந்தது என்று வாக்குவாதம் செய்தார். இருவரின் படைப்புகளில் எது சிறந்தது என்று தீர்மானிக்க இரண்டு கவிதைகளையும், ஸ்ரீ ஜகன்நாதரின் திருப்பாதங்களில் வைத்து, கதவைத் தாளிட்டு கோயிலுக்கு வெளியே சென்று விட்டனர். சில நேரங்கள் கழித்து மறுபடி கதவைத் திறந்து உள்ளே சென்று பார்த்தனர். என்ன ஆச்சர்யம்! ராஜாவின் கவிதை எழுதப்பட்ட ஓலை கீழே தரையில் தள்ளப்பட்டு ஸ்ரீ ஜகன்நாதரின் கீதகோவிந்தம் தான் சிறந்தது என்று தீர்ப்பு வழங்கிவிட்டார் என்று உணர்ந்து பெரும் உவகையடைந்தனர். அன்றிலிருந்து கீதகோவிந்தத்தின் பெருமை (பன்மடங்காயிற்று). மக்கள் அனைவரும் அதை தெய்வீக காவ்யம் என்று போற்றிப் புகழலானார்கள்.

22. ஆழ்ந்த கிருஷ்ணபக்தியுடைய ஸ்ரீ ஜயதேவரால் விவரிக்கப்பட்ட கீதகோவிந்தத்தின் மூலம், அறிவாளிகள், இசைக்கலையில் திறமையும், விஷ்ணுவின் மேன்மையை இடைவிடாது த்யானம் செய்தலும், வெவ்வேறு காவ்யங்களில் சிறப்பாக விவரிக்கப்பட்ட ஸ்ருங்கார ரஸத்துடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணனுடைய ராஸலீலை தத்வத்தை உணர்ந்து அறியவும், இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து, பெறட்டும் என்று 12வது ஸர்கம் ஸ்லோகம் 33ல் பலஸ்ருதியும் கூறியுள்ளார்.

23. "ஸாத்வீ மாத்வீக" எனத் தொடங்கும் ஸ்லோகம் 90ல் இனிய மதுபானமே நீ இனிமை என்று இனியும் நினையாதே! சர்க்கரையே நீ கடினம் த்ராக்ஷயே உன்னை காண எவர் விரும்புவர். அம்ருதமே இனி நீ உயிரற்றது! பாலே நீ ருசியற்றது! மாம்பழமே பயனற்றறது என்று ஓலமிடு! அழகிய பெண்களின் சிவந்த உதடே ஸ்ருங்காரரஸம் நிறைந்த மங்களமான ஜயதேவனின் மிகச்சிறந்த சொற்கள் உள்ளவரை இனிமைக்கு ஸமம் என்று கூற விழையாதே! என்று கூறி காவ்யத்தை நிறைவு செய்கிறார்.

24. கீதகோவிந்தமாகிற அந்த அம்ருத ஸாகாரத்தில் மூழ்கித் திளைத்து நம் அனைவருக்கும் ஸ்ரீ கிருஷ்ணபக்தி மேலிட்டு, ஸ்ரீ ஜயதேவர் போல், அந்த பரப்ரஹ்மத்துடன் இரண்டற கலந்து ப்ரஹ்மானந்தமாகிய மோக்ஷப் ப்ராப்திகிட்ட ஸ்ரீ ஜயதேவரின் திவ்ய பாதசரணங்களைப் போற்றுவோமாக.

*"ஸ்ரீ கோபால விலாஸிநீவலய ஸத்ரத்நாதி முக்தாக்ருதி ஸ்ரீராதாபதி பாதபத்மஜநாநந்தாப்தி மக்னோ (அ) நிஸம் லோகே ஸத்கவிராஜராஜ இதி ய: க்யாதோ தயாம் போநிதி தம்வந்தே: ஜயதேவ ஸத்குருவரம் பத்மாவதீ வல்லவம்"*

*கோபியர்களின் வளைகளிலுள்ள சிறந்த முத்து முதலான ரத்னங்களின் வடிவம் கொண்ட ராதையின் மணவாளனின் பாதத்தாமரையைத் தொழுது எப்போதும் ஆனந்தக் கடலில் மூழ்கியவரும், உலகிலேயே சிறந்த கவியரசர் எனப் பெயர் பெற்றவரும் கருணைக் கடலும், பத்மாவதியின் பதியும், உன்னதருமான குருவுமான ஸ்ரீ ஜயதேவரை வணங்குகிறேன்.*

## ஸ்ரீ நாராயணதீர்த்தரும் அவர் அருளிச் செய்த ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியும்

*1. ஸ்ரீ நாராயண தீர்த்தர் கி.பி 17- ம் நூற்றாண்டில் ஆந்திரப் ப்ரதேசத்தில் உள்ள குண்டூர் மாவட்டத்தில் விளத்தூர் என்ற கிராமத்தில் அவதரித்ததாகச் சொல்லப்படுகிறது. பூர்வாஸ்ரமத்தில் அவருடைய பெயர் மாதவன் என்றும் கோவிந்த சாஸ்திரி என்றும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர் தன் இளம் வயதிலேயே பகவத் பக்தியில் ஈடுபட்டு பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று, பகவத் தரிஸனம் செய்தார் என்றும் அவர் வேதாத்திரியைச் சேர்ந்த பெண்ணை மணந்து இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டார் என்றும், கர்ணபரம்பரை வாயிலாகத் தெரிகிறது. அவர் இளமையிலேயே வேத சாஸ்த்திரங்கள், சங்கீத சாஹித்யங்களில் விற்பன்னராக இருந்தார் என்றும் தெரிகிறது.*

*2. ஒரு சமயம் கிருஷ்ணாநதியின் அக்கரையிலுள்ள தன் மாமனார் வாழ்ந்த வேதாத்திரி கிராமத்தை அடைய நீந்திச் செல்கையில் நதியில் திடீரென்று வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வெள்ளம் அவரை உருட்டி சென்று விட்டது. அவர் உயிருக்கு பேரபாயம் ஏற்பட்ட சூழ்நிலையில் அவர் தான் க்ருஹஸ்தாஸ்ரமத்தை துறந்து ஸந்நியாச மார்கத்தை தழுவுகிறேன் என்று ப்ரதிக்ஞையை எடுத்துக் கொண்டார். வெள்ளமும் வடிந்து அக்கரையிலுள்ள மாமனாரின் வீட்டையடைந்தார். அவரைப் பார்த்த அவரின் மனைவி அவரிம் ஒரு ஸந்யாசியின் காந்தி வீசுவதை உணர்ந்தார். அவரிடம் விசாரித்த போது நடந்தவற்றை அறிந்தாள். பின் தன் மனைவியிடம் அனுமதி பெற்று இல்லறவாழ்வைத் துறந்து காஞ்சீபுரம் சென்று ஸ்ரீசிவராம தீர்த்தர் என்ற மஹானிடம் முறைப்படி ஸந்நியாசம் பெற்றார் என்று சொல்லப்படுகிறது. கிருஷ்ணா நதி வெள்ளம் ஸ்ரீ தீர்த்தரை ஸந்நியாசி ஆக்கியது. ஸ்ரீ கிருஷ்ண மஹாஸாகரம் அவரை ப்ரஹ்மஞானி ஆக்கியது போலும் இது ஆதிசங்கரர், முதலை தன் காலைப் பிடித்துக் கொண்டதை வ்யாஜ்யமாகக் கொண்டு ஸந்நியாசம் வாங்கிக் கொண்டதை நினைவுபடுத்துகிறது.* (தொடரும்)

# அத்வைத ஸித்தாந்த வினா விடை 1

***வினா :*** - *ஸர்வ வித்தைகளின் உட்கருத்தும், ப்ராசீன ஆசிரியர் அனைவருடைய உள்ளக் கருத்தும் என்ன?*

***விடை :*** - *அவையாவும் அத்வைத உண்மையிலே நிஷ்டை கொண்டவையாய் நிற்கின்றன.*

***வினா :*** - *இவ்வாறு கூறுவதற்கு ஏதேனும் ஆதாரமுண்டா?*

***விடை :*** - *ஸ்ரீ அப்பைய தீக்ஷித ஸ்வாமிகள் ஸ்ரீ கண்ட பாஷ்ய உரையின் ஆரம்பத்தில், ''உபநிஷத்துக்கள், ஆகமங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், மகாபாரதம் முதலிய பிரபந்தங்கள் ஆகிய அனைத்திற்கும் இரண்டற்ற அத்வைதக் கருத்துக்களை விளக்குவதிலேயே நோக்கம். ஆராய்ந்து பார்த்தால், பிரும்ம சூத்திரங்களும் அத்வைதக் கொள்கைகளையே விளக்குகின்றன. அதனாலே தான் உலகினுக்கு எக்காலத்தும் நன்மை புரிகின்றவர்களான பழமை மிக்க ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் முதலிய ஆசிரியர்கள் அவ்வுயரிய இரண்டற்ற அத்வைதக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அவற்றை விளக்கி உதவி புரிந்தார்கள்'' என்று காப்புக் கவிகளிலே கூறியிருக்கிறார்கள்.*

***வினா :*** - *இவ்வாறு கூறுவதற்கு அனுபவிகளுடைய வாக்கியம் ஏதாவது ஆதாரமாக இருக்கிறதா?*

***விடை :*** - *இருக்கிறது. ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள்,*

*வேதமுடன் ஆகம புராணமிதி காசமுதல் வேறுமுள கலைக ளெல்லாம்*

*மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே விரிவாக எடுத்துரைக்கும்.*

*ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை உண்டுபணு ஞான மாகும்.*

*ஊகமனு பவவசன மூன்றுக்கும் ஒவ்வும் துபயவாதிகள் சம்மதம்*

*என்று கூறுகிறார்.*

***வினா :*** - *இன்னம் ஏதாவது ஆதாரம் உண்டா?*

***விடை :*** - *தமிழ்த் தெய்வமாகிய ஔவையார்,*

*தேவர் குறளும், திருநான்மறை முடியும்,*

மூவர்தமிழும், முனிமொழியும், கோவை,

திருவா சகமும் திருமூலர் சொல்லும்,

ஒரு வாசக மென் றுணர் என்று கூறி இருக்கிறார்.

**வினா :** - இந்த ஔவையார் வாக்கால் என்ன தெரிகிறது?

**விடை :** - தமிழ் நாட்டிலுள்ள பழைமை பொருந்திய உயர் கருத்துடைய எல்லா பெரு நூல்களுக்கும் உபநிஷதம் கொண்ட நான்மறைகளின் முடிவிலுள்ள கொள்கையே கொள்கை என்று ஏற்படுகிறது. இதனால் தமிழ் மக்களுடைய அனாதிசமயக் கொள்கை நால்வேத சமயக் கொள்கையே என்பது வெளிப்படை.

**வினா :** - தமிழ் மொழியின் அமைப்பில், இவ்வுண்மையை விளக்கக்கூடிய சான்றுகள் உள்ளனவா?

**விடை :** - உள்ளன. ஒரு மொழி வழங்கும் நாட்டிற்கு அந்நாட்டில், அனாதியாக வழங்காத ஒரு பொருளோ கருத்தோ பிறநாட்டிலிருந்து புதிதாக வந்தால், அப்பொருளுக்கோ, கருத்துக்கோ, அந்நாட்டு மொழியில் பெயர் ஏற்படுவதில்லை. தற்காலம், மேனாட்டிலிருந்து வந்த பொருள்களான, ரயில், மோட்டார், சைக்கிள், சோப் முதலியவற்றிற்கும் இன்ஷ்யூரன்ஸ், பாங்க், மில், மெஷின் முதலியவற்றிற்கும் நம் தமிழில் ஒரு சொல்லாகப் பெயர் ஏற்படவில்லை. எந்நாட்டிலிருந்து எப்பொருள் கருத்து முதலியன வந்தனவோ, அந்நாட்டு மொழியின் மொழிப் பெயராலேயே இந்நாட்டிலும் அவை வழங்கி வருகின்றன.

அதுபோலவே, வேதசமயக் கருத்துக்களும், கொள்கைகளும், அனுஷ்டானங்களும் பிறநாட்டிலிருந்து ஏதோ ஒரு காலத்தில் தமிழ்நாட்டிற்குப் புதிதாக வந்திருந்தால், அவைகளுக்குத் தமிழ்மொழியில் தனிச் சொற்பெயர்கள் ஏற்பட்டிரா. வேதவேதாந்தங்களுக்கு 'ஒத்து' என்றும், 'மறை' என்றும், யஜ்ஞத்திற்கு 'வேள்வி' என்றும், பிராமணனுக்குப் 'பார்ப்பான்' என்றும் தனிச்சொற்கள் தமிழ்மொழியிலேயே அமைந்திருக்கின்றன. தமிழ் வளம் பெற்று விளங்கிய காலத்திலேயே மறைகளின் தத்துவங்கள் தமிழ் மக்களிடையே நிலைபெற்றிருந்தன' என்பதற்கு இத் தனிமொழிகள் சான்று ஆகும்.

(தொடரும்)

# பகை வெல்லும் வழி

*தனி மனிதர்களுக்கும் மனித சமுதாயங்களுக்கும் பகைமை என்பது எப்பொழுதுமே உண்டு. பகைமையை உட்பகைமை, புறப்பகைமை என்று இரண்டாகக் கூறுவார்கள். 'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' என்ற பழமொழியைப் போல், உட்பகைமையாகிய காமம் முதலான அறுவகைக் குற்றங்கள் நமக்கு நன்மை செய்வனபோல நடித்து முடிவில் நம்மைக் குழியில் ஆழ்த்தும். இவற்றை அறிந்து கடிவது சாமானியச் செயலன்று. உட்பகைகளை வென்றவர்களே உண்மையில் மகாவீரர்கள். புறப் பகைமை அவ்வளவு கொடியதன்று. அது நயவஞ்சகம், சூழ்ச்சி முதலான மற்ற வழிகளாலும், கொடிய சொற்கள், செயல்கள் முதலியவற்றாம் நம்மை அழிக்க எதிர்த்து வரும். பகைமையை வெல்வதற்கு வழிகளையும் பெரியோர்கள் வகுத்து வைத்திருக்கிறார்கள்.*

*இன்று நம் சமுதாயத்துக்கு மேலே சொன்ன இருவகைப் பகைமைகளும் அதிதீவிரமாக முனைந்து வருகின்றன. மெழுகுவர்த்தி இருபுறமும் எரியத் தொடங்கினால் அதன் கதி என்ன ஆகுமோ, அதே கதி நம் சமுதாயத்துக்கும் வந்துவிடுமோ என்ற அச்சம் தோன்றும் நிலையை நாம் அடைந்திருக்கிறோம். ஆனால், ஈச்வரானுக்கிரகத்தினால் தர்மவிளக்கு மிகச் சில இடங்களில் இன்னும் எரிந்துகொண்டிருக்கிறது. நம் ஆசார்யர்கள் போன்ற சில மகாபுருஷர்கள் அந்த விளக்கு அணையாமலிருக்க அரும்பாடு பட்டு வருகிறார்கள். அந்த விளக்குக்கு அவர்கள் ஊற்றும் நெய், பண்டைய மார்க்கங்கள் என்பனவே. அந்த மார்க்கங்கள் புராண இதிகாசங்களிலும், நீதி நூல்களிலும், தேவாரம், திருவாசகம், ஆழ்வார் அருளிய பாடல்கள் போன்ற தெய்வீக நூல்களிலும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த விளக்குக்கு அவர்கள் போடும் திரி, அன்பு.*

*இத்தகைய நூல்களில் பகைமையை நீக்கப் பல வழிகள் அநுபவ வாயிலாகக் காட்டப்பட்டுள்ளன. திருவள்ளுவர் புறப் பகையை நீக்குவதற்கு ஓர் அழகான வழியைச் சொல்லுகிறார். நமக்குத் துன்பம் செய்தவருக்குத் தண்டனை விதித்தலாவது-அவர் வெட்கப்படும்படி அவருக்கு நல்ல உபகாரத்தைச் செய்துவிடுதல் என்பது அவர் காட்டும் வழி. ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்பது குறள். இது சொல்லுவதற்கு எளிதானாலும், செய்வதற்கு மிகவும் அருமையானது. இது மிகவும் உயர்ந்த தத்துவம். ஐம்புலன்களையும் அடக்கிய முனிவர்களுக்கே அருமையானது. ஆனால் உண்மையை உள்ளபடி அறிந்து நடக்கும்*

ஏழைச் சம்சாரியும் இந்த வழியைப் பின்பற்றக்கூடும். வேண்டியது மனத்தின் பண்பாடே.

இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பார்ப்போம். ஸ்ரீராமர் பூமியில் மனுஷ்ய தர்மத்தை அநுஷ்டித்துக் காட்டவே அவதாரம் செய்தார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அவருடைய கோதண்டத்துக்கு முன் அண்டங்களெல்லாம் ஒன்று கூடினாலும் நிற்கமாட்டாது. அவர் இராவணனுக்கு எதிரிலே போர் செய்யச் சித்தமாக நின்றபோது ஒரு சிறிய சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. விபீஷணன் இராமரை நோக்கி, ‘‘ஐயா, தங்களிடம் ரதமோ, போதிய ஆயுதங்களோ காணப்படவில்லையே! காலில் பாதரக்ஷைகூட இல்லையே! கொடுமையான ஆயுதங்களுடனும் பக்க பலங்களுடனும் பல தேர்களுடனும் வருகிற அந்தக் கொடியோன் முன் தாங்கள் எவ்வாறு நின்று சமாளிக்கப் போகிறீர்கள் என்று அஞ்சுகிறேன்’’ என்றான்.

அதற்கு இராமர், ‘‘என் அருமை நண்ப! என் ரதம் பிறர்கையாளுவது போன்றதன்று. ஆண்மையும் வீரமும் அதன் சக்கரங்கள். இம்மியும் மாறாத உண்மையும் ஒழுக்கமுமே அதன் கொடிகளும் சின்னங்களும். பலம், பகுத்தறிவு, தன்னடக்கம், பரோபகாரம் என்பன அதன் குதிரைகள். மன்னிப்பு, இரக்கம், சாந்தம் இவையே அவற்றின் கடிவாளங்கள். ஈசுவர பக்தி என் ரதத்தின் சாரதி. அமைதி அதன் கவசம். போதுமென்ற மனம் அவன் பிடிக்கும் வாள். தானம் அவன் கைக் கோடாரி. புத்தி அவனுடைய ஈட்டி. பிசகாத விஞ்ஞானம் அவன் கையிலுள்ள வலிய வில். அவனடைய தூய, அசைக்க முடியாத மனமே அம்பறத் தூணி. மனச்சாந்தமும் யம நியம யோகமும் அவனுடைய அம்புகள்; அவன் தன் குருவுக்குச் செய்யும்வணக்கமே அவனுடைய கவசம். என் ஆருயிர் நண்ப! வெற்றிக்கு இதைவிடச் சிறந்த ஆயுதங்கள் எங்கே உண்டு? தர்மரதத்தில் வீற்றிருப்பவனை எதிர்க்க வல்லார் மூவுலகிலும் இல்லை. இத்தகைய வலிமை மிகுந்த ரதத்தில் நான் ஏறியிருக்கிறேன். இவனுடைய படைகள்என்னை என்ன செய்ய முடியும்?’’ என்றார்.

இந்த வரலாறு நமக்கு நல்ல படிப்பினையைக் கொடுப்பதாக. தினம் நம்மைச் சூழ்ந்து வரும் எதிரிகளின் அம்புகள் கணக்கற்றவை. அவற்றைச் சமாளிக்க நாம் நமக்கென ஒரு தர்மரதத்தைப் படைத்துக்கொள்ள முயல வேண்டும்.